# போராட்டம்

இதழ் - 22 2015 யூலை - ஆகஸ்ட் | மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 20 ரூபா














# முகமாற்றம் போதும் அமைப்பு மாற்றத்திற்காக முன்னிலை சோசலிச கட்சிக்கு வாக்களிப்போம்

இலங்கையில் இருக்கின்ற அனைத்து பாராளுமன்ற கட்சிகளிடமும் இருக்கின்ற அரசியல் ஒன்று தான். தமது பிழைப்பிற்க்காக தேவைப்படுகின்ற போதெல்லாம் கையில் எடுப்பது இனவாதம் மதவாதம். நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலிலும் மக்களை இன மத ரீதியில் பிளவுபடுத்தியும் பொய் வாக்குறுதிகளை கூறியும், லஞ்சமாக பல பொருட்களை வழங்கியும் பாராளுமன்ற அரியணையினை கைப்பற்றுவதற்காக பகிரங்க பிராயத்தனங்கள் நடைபெறுவதனை காண்கின்றோம். இவர்கள் யாரிடமும் மக்களின் பொருளாதார பிரச்சினை முதல் தேசிய இனப்பிரச்சினை வரை தீர்வுகள் கிடையாது. கடந்த 67 வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்து வந்தவர்கள் தொடங்கி இவர்களுடன் இணைந்து நின்ற இடதுசாரிகள் வரை, இதனை நாம் கண்டு வருகின்றோம். இன ரீதியான தமிழ் முஸ்லீம் கட்சிகள் வரை இதற்கு விதிவிலக்கு கிடையாது.

இவர்களின் ஆதரவுடன் 2009 ஆண்டிற்கு பின்னர் மிக தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கப்படுகின்ற நவதாராளவாத பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக எமது நாட்டில்

1.இலவச கல்வி மற்றும் மருத்துவத்திற்கு வேட்டு வைக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

2.பல்தேசிய கம்பனிகளால் மக்களின் சுற்று சூழல் மாசடைவதல் குடிநீர் நச்சுத்தன்மை ஊட்டும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

3.மக்களின் சொந்த வாழ்வு நிலங்கள் பல்தேசிய கம்பனிகளின் தேவைகளுக்காக வலுக்கட்டாயமாக பறித்தெடுக்கப்படுகின்றன.


4.தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

5.விசாயிகளின் அனைத்து விதைகளின் உரிமம் மறுக்கப்பட்டு பல்தேசிய கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.


**தொடர்ச்சி 14 பக்கத்தில்**


## அன்று குடும்பம் - இன்று கூட்டு - நாடோ குழப்பத்தில்

## உண்மையான மாற்றம் இடதுசாரிய பலம்!



## முன்னிலை சோஷலிஸக் கட்சி

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?


படிப்பகம்

# தேர்தல் சாதிக்கப் போவது என்ன?

தேர்தல் முறையானது மக்களை அடக்கியாளும் ஆளும் வர்க்கத்தை தெரிவு செய்கின்றது. இலங்கையில் மக்களை இன–மத–சாதி ரீதியாக பிரிக்கின்றது. மக்கள் விரோதமே தேர்தல் முறையாகவும், ஜனநாயகமாகவும் இருக்கின்றது. இதற்கு மாறாக மக்கள் திரள் போராட்டம் மூலம் அரசை தூக்கியெறியும் அரசியல் நடைமுறை மூலமே, உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

அதேநேரம் தேர்தல் என்பது கூர்மையான அரசியல் செயற்பாட்டுக்குரிய காலமாகவும், அரசியலை மக்கள் கூர்ந்து அவதானிக்கும் காலமாகவும், ஜனநாயகச் செயற்பாட்டுக்குரிய காலமாகவும் இருக்கின்றது. மக்கள் திரள் பாதை மூலம் மாற்றத்தைக் கொண்டு வர முனைகின்ற சக்திகள், தேர்தல் காலத்தை எப்படி எதிர்கொள்வது என்பது மிக முக்கியமானது.

நிலவும் மக்கள் விரோத தேர்தலையும், தேர்தல் முறையையும் பகிஸ்கரிப்பதா? அல்லது தேர்தலில் பங்கு கொண்டு இந்த முறையை அம்பலப்படுத்தி அரசியல் மயப்படுத்துவதா?

மக்கள் விரோத தேர்தலும், தேர்தல் முறையும், இலங்கைக்கு மட்டுமான சிறப்பான ஒன்றல்ல. மாறாக உலகளாவியது. இந்த முறையையே ஜனநாயகமாக நம்புகின்ற மக்களையும், மக்களின் செற்பாடுகளையும், வரட்டுத்தனமாக நிராகரிக்க முடியாது.

தேர்தல் ஜனநாயக வடிவிலான செயல் என்ற வகையில், அதில் பங்குகொள்வது அவசியமாகின்றது. ஜனநாயகமற்ற நிலப்பிரபுத்துவ நாடுகளில் தேர்தலை எதிர்கொள்ளாமல் பகிஸ்கரித்தலில் இருந்தும், இலங்கை பொருளாதார கட்டமைப்பு வேறுபட்டது.

இலங்கையில் தேர்தல் என்பது இன பிரதிநிதித்துவத்தைக் கோருவதாக இனவாதமாகி இருக்கின்றது. அதே நேரம் இனவாதமானது இயல்பில், வலதுசாரிய தன்மை பெற்ற ஒன்றாக மாறி இருக்கின்றது.

இனவாதத்துக்கு எதிரானதும், வலதுசாரிய போக்கிற்கு எதிரான மக்கள், தேர்தல் பகிஸ்கரிப்பதன் மூலம் அரசியல் அணிதிரள்வதற்கான முன்நகர்த்தும் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. மாறாக இனவாதத்துக்கும், வலதுசாரியத்திற்கும் எதிரான இடதுசாரிய வாக்களிப்பு மூலமே, தங்கள் அரசியல் செயற்பாட்டை நடைமுறை பூர்வமானதாக மாற்ற முடியும். இனவாதத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் வடிவங்களில் ஒன்றாக தேர்தலில் பங்கு கொள்வதும், இனவாதத்துக்கு எதிராக வாக்களிப்பதும் முதன்மை பெற்ற இடதுசாரிய அரசியல் செற்பாடாக தேர்தல் காலம் அமைகின்றது. இடதுசாரிகள் இனவாதத்துக்கும், வலதுசாரியத்திற்கும் எதிராக மக்களை வாக்களிக்குமாறு கோரி, தங்கள் அரசியல் செயற்பாட்டை முன்னெடுப்பதே வரலாற்றின் ஒரேயொரு அரசியல் தெரிவாகும்.

# வாக்களிக்கின்றோமா! எதற்காக?

எங்கடை பிரச்சனைகளைத் தீர்க்க, எங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றோம் என்பது உண்மையா? எங்கள் வாக்குகள் மூலம் தெரிவான பிரதிநிதிகள், பிரச்சனைகளைத் தீர்த்து இருக்கின்றனரா? எமது சுயமான தெரிவுகளுடன் தான் நாங்கள் வாக்கு போடுகின்றோம் என்றால், நாங்கள் பகுத்தறிவுபூர்வமாக இதற்கு பதில் சொல்லியாக வேண்டும்.

தேர்தலையே தங்கள் அரசியலாகக் கொண்ட அரசியல்வாதிகளும் – வியாபரத்தையே தங்கள் நோக்கமாகக் கொண்ட ஊடகங்களும் ஊடகவாதிகளும், மக்கள் மத்தியில் இன–மத வாதத்தைத் தூண்டி பிழைப்பதுமாக அரசியல் மாறி இருக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகள் பற்றி, அரசியல்வாதிகளும் – ஊடகங்களும் பேசுவதில்லை. ஏன் மக்களின் வாழ்க்கை பிரச்சனையை அரசியலாகக் கூட அணுகுவதில்லை.

இலங்கையில் அரசியலாகவும், தேர்தல் ஜனநாயகமாக இருப்பது இனவாதம். இது தமிழன் – சிங்களவன் – முஸ்லிம்கள் – மலையகத்தான் என்று பிரிக்கின்றது. இது தான் ஜனநாயகமாக இருக்கின்றது? மக்களை இன–மத ரீதியாக பிரித்து தங்கள் சொந்த பிழைப்புக்கு அரசியல் நடத்துகின்றவர்கள், இதை மக்களின் பிரச்சினையாக காட்டி வாக்கு கேட்பதும் நடந்து வருகின்றது.

இயல்பாக இணைந்து வாழும் பல் இன–மத மக்கள் மத்தியில், இன – மத முரண்பாட்டை போலியாக கட்டமைத்து முன்தள்ளும் இனமத பிரச்சாரங்களுக்குள், இலங்கை மக்களை பிரித்தாளுகின்ற எல்லைக்குள் வாக்கு கேட்பதும் – வளர்ப்பு மந்தைகள் போல் வாக்கு போடுவதும் நடந்தேறுகின்றது.

இலங்கை சமூகத்தில் இனமதம் கடந்து இணைந்து வாழும் மக்கள் வாக்கு போடும் போது, இன – மதவாதிகளாக மாறி வாக்கு போடுவதும், அதை நியாயப்படுத்த இன–மத–சாதி "பிரநிதித்துவம்" பற்றிய பேசுகின்ற அளவுக்கு, இனவாதம் தேர்தலில் முன்தள்ளப்படுகின்றது.

இன வாக்கு மூலம் வெற்றி பெறுகின்றவர்கள் அனைவரும் இனவாதிகளாக இருப்பதுடன், இனரீதியாக மக்களை பிரிந்து வாழும்மாறு கோருகின்றனர்.

ஆனால் எதார்த்தத்தில் இனம் கடந்து மக்கள் இணைந்து வாழ்வதே, அன்றாட வாழ்க்கை முறையாக இருகின்றது. யாரையும் யாரும் எதிரியாக அணுகுவதோ, வெறுப்பதோ கிடையாது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஒன்றாக பயணிப்பது என்பது மட்டும் தான் வாழ்க்கைகுரிய தீர்வாகவும், அன்றாட நடைமுறையாகவும் இருக்கின்றது.

இன ரீதியான வாக்களிப்பு என்பது, எமது அன்றாட வாழ்க்கை முறைக்கு முரணானது. சேர்ந்து வாழும் வாழ்க்கை முறை மூலமே, எதையும் தீர்க்க முடியும் என்பதே, வாழ்வின் எதர்த்தமாக இருக்கின்றது. இனரீதியான பிளவு என்பது அன்றாட வாழ்க்கை முறைக்கு முரணானதும், கற்பனையான அரசியலாகவும் இருக்கின்றது.

இன்று இனரீதியான வாக்களிப்பை மறுப்பதே, பகுத்தறிவு பூர்வமான சுயமுடிவாக இருக்க முடியும். இனவாதத்துக்கு எதிராக இன ஐக்கியத்தை கோரியும், அதேநேரம் மக்களின் அன்றாட பிரச்சினைகளை பேசும் கட்சிக்கு வாக்களிப்பது மட்டுமே சரியான சுய தேர்வாக இருக்க முடியும்.

# முகத்துக்கு வாக்களிப்பதா! கொள்கைக்கு வாக்களிப்பதா!!



**மக்களின்** அவலம் நிறைந்த வாழ்வுக்கான தீர்வுகளை கொள்கையாகக் கொண்டிராத கட்சிகள், கொள்கையற்ற கட்சிகளாக இருப்பதுடன், முகத்தை முன்னிறுத்தி வாக்கைக் கோருகின்றனர்.

இங்கு தங்கள் முகங்களை முதன்மைப்படுத்தி, மக்கள் கொள்கையை மறுக்கின்றவர்களாகவும், தியாகம் – சமூக அர்பணிப்பு அற்றவர்களாகவும் இருகின்றனர். மாறாக மக்களைச் சொல்லி பிழைக்கின்றவர்கள் – சொத்தைக் குவிப்பதற்கே அரசியலை முன்வைக்கின்றனர்.

அரசசார்பற்றநிறுவனங்களும் –உலகமயமாக்கமும் – அரசு துறையும் முன்னெடுக்கும் இன்றைய செயற்பாடுகளை, தங்கள் செயற்பாடாகவும் – தங்கள் மக்கள் சேவையாக காட்டிக் கொண்டு வாக்கைக் கோருகின்றனர். நாட்டை அந்நியனுக்கு விற்கும் உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலில் போடும் எலும்புத் துண்டை காட்டி, தங்கள் மக்கள் சேவை என்று பீற்றி வாக்குக் கேட்கின்றனர்.

இப்படி தங்கள் கொள்கையற்ற முகங்களை முன்னிறுத்தி முன்னெடுக்கும் மக்கள் விரோத கொள்கையை மூடிமறைக்க

1.மக்களை பிளந்து இனரீதியாகவும் – இன பிரதிநித்துவதுக்கு வாக்களிப்பதன் மூலம், இனத்துக்கு நன்மை செய்ய தங்களை பாராளுமன்றம் அனுப்பக் கோருகின்றனர்.

2.அபிவிருத்திக்கு தடையான "இனவாத" தேசியவாதத்தைத் தோற்கடிக்க, இனவாத "ஐக்கியம்" மூலம் சேவை செய்ய தங்களை தெரிவு செய்யக் கோருகின்றனர்.

3.அரசு மூலமான கடந்த உலகமயமதால் திட்டங்களைக் காட்டி, அதை நாட்டினதும்– தனிப்பட்ட நபர்களினதும் வளர்ச்சியாக முன்னிறுத்தி, அதைத் தொடர தமக்கு வாக்களிக்க கோருகின்றனர்.

இன்று அரசியல் என்பது எந்த முகத்தை தெரிவு செய்வது என்பதே ஒழிய கொள்கையல்ல என்று கூறும் கொள்கையற்ற கட்சிகள், இறுதியில் இதை இன்று மக்களின் பிரச்சினையாக – இதுதான் மக்களுக்கான தீர்வாகவும் முன்வைக்கின்றனர். கடந்த 67 வருடமாக வாக்களிப்பதன் மூலம் முகத்தை மாற்ற எதை தேர்தல் மூலம் முன்வைத்தார்களோ, அதுதான் மக்களுக்கான தீர்வு என்கின்றனர்.

67 வருடமாக ஏமாறிய மக்களுக்கு – அவர்களின் வாழ்வியல் பிரச்சினைக்கு தீர்வு காண கொள்கை ரீதியானதும் – தியாகம் அர்ப்பணிப்பும் கொண்ட கட்சியும் – அரசியலும் இன்று தேவையாக உள்ளது.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

# மக்களின் உரிமையும், கடமையும், அரசியல் பலமும்

இலங்கையின் அடுத்த பொதுத் தேர்தலையொட்டி ஆய்வாளர்கள்–அறிஞர்கள்–வல்லுனர்கள்–விமர்சகர்கள்––சமூக அக்கறையாளர்கள்–மக்கள் நலன் விரும்பிகள் என பலதரப்பட்ட செயற்பாட்டாளர்களிடமிருந்து ஊடகங்களில் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அதேவேளை பாரம்பரிய–பரம்பரை–புதிய கட்சிகள் பழைய–புதிய கூட்டமைப்புக்கள் யாவும் தங்கள் வழமையான ஆட்பலம்–அணிவகுப்பு–ஆரவாரங்கள் அடங்கிய விழாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துள்ளன.இதேவேளை இவர்கள் யாவரும் எதனைக் காட்டி தங்கள் பொறிக்குள் மக்களை மாட்டி வைக்கலாம் என்கிற ஒரே நோக்கத்துடன் தங்கள் நடவடிக்கைகளை முடுக்கியும் விட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இலங்கைக் குடிமக்கள் நாட்டினதும்––நாட்டின் குடிமக்களினதும் நலன்களை முன்னிறுத்தித் தங்கள் வாக்குகளை போட்டது கிடையாது. அப்படி மக்களை வாக்களிக்கச் செய்வதான அரசியலும் இலங்கையில் இதுவரை இருக்கவும் இல்லை. மாறாக இன–சாதி–பிராந்திய–பால்–வர்க்க அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தி மக்களை மக்களுடன் மோதவிட்டு சுயலாபம் தேடும் அரசியல் பண்பாடுதான் இன்றும் தொடருகிறது.

இந்த அரசியலில் நாட்டு மக்களில் ஒரு சாரார் தங்கள் வாக்குகளைப் போடுகிறார்கள். மறு சாரார் வாக்களிக்க மறுக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தேர்தல் முடிவுகளின் பிரகாரம் அமையும் அரசாங்க ஆட்சியினால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைக்கும் வாக்களித்தவர்களை விட வாக்குப் போடாதவர்களே கூடிய பொறுப்புள்ளவர்களாகும்.

எமது இன்றைய அவலங்களுக்குக் காரணம் நாங்களே. நாம் எமது கடமையை ஒழுங்காகச் செய்திருந்தால் எங்களது வாழ்வு இன்றைய கொடூரங்களை சந்தித்திருக்காது. கடந்த காலங்களில் நாம் ஓட்டுப் போட்டு நம்மை ஆட்சி செய்ய அனுப்பிய எமது பிரதிநிதிகளுடைய செயற்பாடுகளின் விளைவுகள்தான் இன்றைய எமது துன்பங்கள். இந்த துன்பங்களைத் தடுக்கக்கூடியவர்கள் வாக்களிக்காமல் ஒதுங்கும் குடிமக்களே. "இந்த அரசியலால் பிரயோசனம் இல்லை" என ஜனநாயகப் பங்களிப்பிலிருந்து ஒதுங்குவதன் மூலம் நாம் மேலும் நம்ம தலைமேல் மட்டுமல்ல நாட்டு மக்கள் அனைவரின் தலைமேலும் அநீதியும் அநியாயமும் ஆட்சி செய்யத் துணை போகிறோம்.

இன்று முதற்கொண்டு எம்மையும் எமது மண்ணையும் வளம்படுத்தக் கூடிய அறிவாற்றல் உள்ளவர்களை – நாம் பிறந்த எமது நாட்டில் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்வதற்குரிய பாதையில் மக்களுக்காக தன்னலமின்றி உழைக்கக் கூடிய துணிச்சல் உடையவர்களை எமது பிரதிநிதிகளாக மக்களாகிய நாமே நமக்குள் தெரிந்தெடுத்து தேர்தலில் நிறுத்தவேண்டும். இதனைச் சரிவர நடைமுறைப்படுத்த வேண்டிய அடிப்படைத் தேவை எமது அரசியல் விழிப்புணர்ச்சியேயாகும். "அரசியல் வேண்டாம்" என ஒதுங்குபவர்கள் உள்ளங்களில் நீதியும் நியாயமும் உறங்கிய நிலையில் உள்ளன. கொடியவர்களின் கொடுமையைவிட நல்லவர்களின் மௌனம் அதைவிடக் கொடுமையானது.

நாம் எமது கடமையைச் சரிவர நிறைவேற்றாமல் அடுத்தவரைக் குற்றம்சாட்டுவதும் அந்நியர்களிடம் நியாயம் கேட்பதும் நன்மையைத் தராது. தன்னலம் பார்த்து தனித்தனியே சிந்தித்து செயற்பட்டதனால் உறவுகளையும் – சந்ததிகளையும் பிரிந்தும்–இழந்தும் உடைமைகளைப் பறிகொடுத்தும் இன்று சீரழிந்து நிற்கிறோம்.

இனிமேலாவது நாம் சமூகம் சார்ந்து சிந்திக்க வேண்டும். நாம் வாழவேண்டுமானால் சமூகம் வாழவேண்டும். சமூகத்தின் வாழ்வு மக்கள் கூட்டத்தின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. மக்கள் கூட்டத்தின் முன்னேற்றம் நாட்டின் ஆட்சி முறைமையைப் பொறுத்தே அமைகிறது. "நல்லாட்சி"யின் நடைமுறை "அரசியலமைப்பு சட்டதிட்டம்" என்ற மூலப் பொறிமுறையில்தான் இயங்குகிறது. இந்தப் பொறிமுறை மாற்றியமைப்பட்டால் அன்றி நாட்டில் "மாற்றம்" ஏற்படவோ–ஏற்படுத்தவோ முடியாது.

67 வருடங்களாக ஏமாந்ததும்–ஏமாற்றப்பட்டதும் போதும். எமது உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டுமானால் நாம் எமது வாக்களிக்கும் கடமையைச் செய்யவேண்டும். அடிப்படை மாற்றம் வேண்டி குடிமக்கள் தங்கள் வாக்களிப்பின் மூலம் ஒன்றுபட்டு அணிதிரளும் போது உருவாகும் "பலம்" எவராலும் – எதனாலும் தோற்கடிக்கப்பட முடியாதது. அதுவே மாபெரும் மக்கள் சக்தியாகும். மனித வரலாறு முழுவதும் இது நிருபணம் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் பல நாடுகளில் அடக்குமுறை ஆட்சிகள் மக்களின்




வாக்களிப்பின் மூலம் தூக்கி வீசப்பட்டுள்ளன. ஆனால் அந்த மாற்றங்களுக்காக முன்னின்று உழைத்தவர்கள் பலர் சிறையையும் சித்திரவதையையும் அனுபவித்தனர். இன்னும் பலர் தங்கள் இன்னுயிரையும் விலையாகக் கொடுத்துள்ளனர்.

இன்று நாம் அனுபவிக்கும் குடியியல் வாழ்க்கை உலகத்தின் பல பாகங்களில் பொதுநலன் கருதி தங்கள் சுயவாழ்வைத் தியாகம் செய்து சிறைசென்று தங்கள் உயிர்களையும் விலையாகக் கொடுத்த மக்கள் தலைவர்களுடைய போராட்டத்தினால் கிடைத்ததொன்றாகும்.(உதாரணமாக) மனித உரிமை சாசனத்தை எழுதத் தூண்டிய பிரெஞ்சுப் புரட்சி வரலாறு. அவர்கள் தங்களுக்காக தங்கள் உயிர்களை தியாகம் செய்யவில்லை. மனிதகுல மேம்பாட்டுக்காக––அவர்களின் சந்ததிகளுக்காகவே உழைத்து உயிரையும் கொடுத்தார்கள்.

நாமுண்டு–நமது வீடுண்டு–நமது வாழ்வுண்டு என வாழ்ந்ததாலேயே இன்று எல்லாமே இழந்து நிர்க்கதியாய் நடுத்தெருவில் நாயினும் கேவலமாக அகதிகளாக–அனாதைகளாக––அடையாளம் இல்லாதவர்களாக உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் அலைந்து கொண்டிருக்கிறோம். குடும்பத்தை–வீட்டை–ஊரை––நாட்டை விட்டுப் பிரிந்து உறவுகளின் நல்லது––கெட்டதுக்குக் கூட சமூகமளிக்க வக்கில்லாதவர்களாக வாழ்கிறோம்.

நாம் நமது மண்ணில் நின்று நம்மை–நமது நாட்டையும் அதனூடாக எமது வாழ்வையும் மேம்படுத்தி மண்ணின் மைந்தர்களாக–மண்ணோடு மண்ணாக வாழ்வதற்குரிய சுதந்திரத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தனது இலக்கைத் தவறவிட்டு எம்மை––எமது உறவுகளை–அயலவரை–அடுத்த ஊரவரை––மண்ணின் மைந்தர்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனச் செயற்பாடாக மாறியது ஏன்? எப்படி? எதனால்? இதற்கு காரணமானவர்கள் யார்? லாபம் அடைந்தவர்கள் யார்? இன்றும் அதே பாதையில் மக்களை அழைத்துச் செல்ல முன் நிற்பவர்கள் யார்?

1924 டிசெம்பர் 29–30–31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற "மாணவர் காங்கிரஸ்––யாழ்ப்பாணம்" என்ற அமைப்பின் அங்குரார்ப்பண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் 1வது பின்வருமாறு அமைந்திருந்தது.

"காங்கிரஸ் நாட்டின் பல்வேறு மத அமைப்புக்களையும் சார்ந்த எவர் ஒருவருக்கும் இடையில் வேறுபாட்டை அல்லது முன்னுரிமையைக் காண்பிக்கமாட்டாது. காங்கிரஸினால் நடத்தப்படும் பொது அல்லது குழுக் கூட்டங்களிலும் அதனால் நிகழ்த்தப்படும் பிரச்சாரங்களிலும் பக்கசார்பான பிரச்சனை எதுவும் ஒருபோதுமே எழுப்பப்படலாகாது" என்னும் வாசகம் யாப்பில் இடப்படவேண்டும்.

காங்கிரஸின் 3வது தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது. "தற்போது நாட்டில் நிலவிவரும் சாதி வேறுபாடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கே ஒரு தடையாகும்"

7வது தீர்மானம்: "தென் இலங்கைப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் வட இலங்கைப் பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பித்தலையும் அறிமுகப்படுத்த விரைந்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்."

8வது தீர்மானம்: "அனைத்து(முக்கியமாக சிங்கள மற்றும் தமிழ்) இனங்கள் மதங்கள் மற்றும் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1925ஏப்பிரல் திங்களில் காங்கிரஸின் அமர்வுகள் இடம்பெறத்தக்கதான நடவடிக்கைகளை காங்கிரஸின் செயற்குழு மேற்கொள்ள வேண்டும்."

அன்று அந்த யாழ்ப்பாண இளைஞர்கள் தீர்க்கதரிசனமாக சிந்தித்து தீவிரமாக செயற்பட்டதை முறியடித்து தங்கள் சுயநல–சுயலாபத்திற்காக மக்கள் வாக்குகளை பயன்படுத்திப் பலனடைந்தவர்களின் வழிவந்த அதே பரம்பரையினர்தான் இன்றும் மக்களின் வாக்குப் பலத்தில் தங்களை வளம்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அன்று சீமைப் (லண்டன்) படிப்பை–ஸ்ரேலிங் பவுணைக் காட்டினார்கள். இன்று வெளிநாட்டு வாழ்வை–டொலரை–யூரோக்களைக் காட்டுகிறார்கள். அன்று முதல் இன்றுவரை இலங்கைக் குடிமக்களின் உரிமைகளை அடைவதற்கான கதவுகளைத் தடை போட்டு அடைத்து வைத்துக் கொண்டு குடிமக்களைப் பிளவுபடுத்தும் அரசியலையே முன்னெடுக்கிறார்கள்.

ஆங்கிலேயரை நம்பி பண்டாவுடனும் ட்டலியுடனும் ஒப்பந்தம். இந்தியர்களை நம்பி ஜே.ஆருடன் ஒப்பந்தம். இன்று ஐ.நாவை நம்பி சிறி–ரணிலுடன் ஒப்பந்தம். ஆனால் இலங்கையின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் அடிப்படைச் சக்தியாக விளங்கும் சிங்கள மக்களுடன் பேசக் கூட இவர்களுக்கு அக்கறை வரவில்லை.

ஒரே நாளில் வட–கிழக்கில் இருந்து இஸ்லாமியத் தமிழ் மக்களை ஒருத்தர் கூடப் பாக்கி இல்லாமல் உடுத்த உடையுடன் நாடு கடத்திய தமிழ்த் தலைமைகள் இன்று சிங்களக் குடியேற்றம் என குமுறுகிறார்கள். தமிழ் இராணுவத்தைப் பாலூட்டி சோறூட்டி வளர்த்தவர்கள் இன்று சிங்கள இராணுவம் பற்றி கண்டனம் தெரிவிக்கிறார்கள். மக்களின் வாக்குப் பலத்தினால்

**தொடர்ச்சி 14 பக்கத்தில்**

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# தேசிய இனப் பிரச்சினை பற்றிய எமது கொள்கை நிலைப்பாடு

**தேசிய** இனப் பிரச்சினை சார்ந்த எமது கொள்கை நிலைப்பாடானது, ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சுயாட்சி அதிகாரத்தை வழங்கி, அவர்களின் பொருளாதார மற்றும் சமூக கலாச்சார அபிவிருத்தியினை பெற்றுக் கொள்வதற்கான, மிகவும் விஞ்ஞானபூர்வமான வழிகளை ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலான ஒன்றையே கொண்டு இருப்பதுடன்

1.இலங்கை ஒரு பன்மைத்துவ சமூகத்தை கொண்டதுடன் சிறுபான்மையினர் தேசிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இந்த தேசிய இன ஒடுக்குமுறைகள் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் அரசாங்கம் ஒன்றின் கீழேயே இல்லாதொழிக்கப்படும். அதேவேளை ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் உத்தரவாதப்படுத்துகின்ற ஒரு முற்றுமுழுதான சுய தன்னாட்சி அலகுகள் இனம், கலாச்சாரம், பொருளாதாரச் சிறப்பம்சங்கள் மற்றும் செறிவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு விஞ்ஞானபூர்வமாக வடிவமைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய உருவாக்கப்படும்.

2.இனப் பிரச்சினையானது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் ஆட்சியின் கீழ் மட்டுமே முற்றுமுழுதாக தீர்க்கப்பட முடியும் என்ற போதிலும், நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு நிரந்தரமான இனப் பிரச்சினைக்கான தீர்வு தமிழ், முஸ்லீம் சமூகங்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களுடன், ஏற்கனவே இருக்கக்கூடிய குறைந்தளவிலான ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களுடன், மக்களுக்கான பரந்த உரிமைகளை வெல்லுதற்கான போராட்டங்களுடன் ஒன்றுபட்டு நின்று, அந்த உரிமைகளை ஒரு பரந்த சோசலிஸ சமூக மாற்றத்துக்கான போராட்டத்துடன் ஒருங்கிணைத்தல் மூலம் மேற்கொள்ளப்படும்.

3.(அ) வடக்கு, கிழக்கு, மலையக மற்றும் பிற தோட்டப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் பண்பாட்டில் மற்றும் மொழியியல் அடிப்படையில் ஒரு தனியான பொது அடையாளத்தைக் கொண்டவர்கள். அத்தோடு சமூகங்கள் மத்தியில் தனித்துவ அடையாளத்தை உடையவர்கள். மொழி, பண்பாடு, பொருளாதாரம் மற்றும் பல்வேறு பிற அம்சங்கள் அடிப்படையாகக் கொண்டு ஒரு இனமாக அவர்கள் வழமையான முதலாளித்துவ அரசாங்கங்களால் ஏற்றத்தாழ்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

முதலாளித்துவ பிரதிநிதித்துவ கட்டமைப்புகளில் கூட அவர்கள் விசேட அடக்குமுறைகள் மற்றும் அதிகாரத் தலையீடுகள் என்ற வழி முறைகளால் அநீதிக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். ஆகவே இனப் பிரச்சினைக்கு முடிவு எட்டப்படும்.

(ஆ) இந்த இனவொடுக்குமுறையுடன் கூடவே தோட்டங்கள் தனியார் சொத்தாகவுள்ள காரணத்தினால் பொதுநல சேவைகள் இல்லாமலும் முதலாளித்துவ சுதந்திரங்கள் கூட இல்லாமலும் தோட்டங்களில் அடிமைப்படுத்தப் பட்டிருக்கின்ற மலையகம் மற்றும் தெற்குப் பகுதியிலும் ஏனைய தோட்டப் பகுதிகளிலும் உள்ள தமிழ் மக்கள். இம் மக்கள் விசேட பொருளாதார, சமூக பண்பாட்டு அரசியல் அடக்குமுறையை முகம் கொள்கிறார்கள். அவர்கள் அடையாளம் தனித்துவமானது. ஒரு இலங்கைப் பிரஜை அனுபவிக்கின்ற இருப்பிடம், கல்வி, சுகாதார பராமரிப்பு, நிலம், பொதுப் போக்குவரத்து, மாதாந்த ஊதியம் மற்றும் மற்றைய தொழிலாளர்களுக்கு உள்ளவாறான உரிமைகள் வழங்கப்படுவதற்கும் தோட்டத் தொழிலாளர்கள் சமூகத்தின் கலாச்சார வாழ்வினை கட்டியமைப்பதற்கும் அவர்களது அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(இ) பல்வேறு மாகாணங்களில் பரந்தும் கிழக்கில் செறிந்தும் தனித்துவமான மத மற்றும் கலாச்சார அடையாளங்களுடன் வாழும் முஸ்லீம் சமூகத்துக்கு எதிரான முதலாளித்துவ அரசின் அடக்குமுறையை, ஒடுக்குமுறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



4.முப்பது வருட கால யுத்தத்திலிருந்து விடுபட்டு வந்த இலங்கைச் சமூகம் விசேட சவால்களை எதிர் கொள்கிறது. அவற்றை வெற்றி கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. அதன் நிமித்தமாக பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு போராட்டத்துக்காக சமூக சக்திகள் அணிதிரட்டப்படும்.

(அ)வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டை ஒழித்து சிவில் நிர்வாகத்தை நிறுவுவதற்கு போராடும் அதேவேளை, மக்களின் ஜனநாயக இருப்பினை மறுத்தலுக்கு எதிராகவும் மற்றும் நாடு முழுவதுமான இராணுவ மயமாக்கலுக்கு எதிராகவும் போராடுதல். அதேவேளை மேலதிக படையணிகளை திருப்பியழைத்தல் மூலம் வடக்கு மக்கள் மேலான அடக்குமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தல் மற்றும் இராணுவத்தை முகாம்களுக்குள் மட்டுப்படுத்தி அவர்களை நாடு முழுவதும் சிவில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தல். புதிய உயிரியல் தடய இலத்திரனியல் அடையாள அட்டையினை மட்டுமல்லாது தேசிய அசமத்துவத்தைப் பேணுகின்ற அடையாள அட்டைகளையும் ஒழித்தல். மற்றும் முதலாளித்துவவாதிகளின் தேவைகளுக்கு உகந்ததான பிரித்து வைக்கின்ற அடையாளமுறைகள் யாவற்றையும் ஒழித்தல். வடக்கு செல்வதற்கு விசேட அனுமதி பெறுதல் மற்றும் வீடுகளில் குடும்பத்தினர் உள்ளடங்கிய புகைப்படங்களை தொங்கவிட வேண்டும் போன்ற அச்சுறுத்தல்களை இல்லாதொழிக்கப் போராடுதல்.

(ஆ)மாகாண சபைகள் தேசிய இனப் பிரச்சனைக்கு ஒரு சரியான தீர்வல்ல என்பதில் மாறாத நிலைப்பாட்டில் உள்ள அதேவேளை, இலங்கையின் முதலாளித்துவ அரசு மற்றும் இனவாதத்தின் பல்வேறு கருத்தாக்கங்கள் என்பனவற்றால் வடக்கு கிழக்கு மற்றும் ஏனைய மாகாணசபைகளுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாடுகளுக்கு எதிராக போராடுதல். அத்தோடு இனவாத அடிப்படையில் மாகாண சபைகளை கலைத்தல் என்பது உள்ளடங்கலான சர்வாதிகாரத் தலையீடுகளுக்கு எதிராக போராடுதல்.

(இ)வடக்கு மற்றும் கிழக்கில் அபகரிக்கப்பட்ட நிலங்களை அம்மக்களிடம் திருப்பி ஒப்படைத்தல் மற்றும் விவசாயம் மற்றும் பிற தேவைகளுக்காக ஏற்படும் நிலப் பிரச்சினைகளை நியாயமாகத் தீர்த்தல்.

(ஈ) காணாமல் போனோர்கள் குறித்த முழுமையான விசாரணை, அதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டித்தல், உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குதல் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல், இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் வாழுகின்ற மக்களை அவரவர் நிலங்களில் மீளக் குடியமர்த்தல், மக்களுடைய பங்களிப்புடன் மீளக் குடியமர்த்தப்படுபவர்களின் தேவைகளை நிறைவேற்றுதல், போரினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நியாயமான இழப்பீடுகளை வழங்குதல். போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காகவும் அதனால் அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்காகவும் விசேட அரச திட்டம் ஒன்றை ஏற்படுத்தல்.

(எ)ஆயுதமேந்திய குழுக்களின் ஆயுதங்களைக் களைதல். சட்டத்துக்கு முரணான வகையில் மறைவில் நடாத்தப்படும் அரச பயங்கரவாதத்தினை முற்றிலும் நீக்குதல்.

(ஏ)தேசிய மொழிகள் மேலான பாகுபாடுகளின் வரலாற்று பிரச்சினைகளை தீர்க்கும் வண்ணம் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றை தேசிய மொழிகளாக உருவாக்குதல்.

**நிறைவாக**

இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்யும் பேரினவாத தலைவர்களும் அவர்களின் கட்சிகளும், ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுக்கு எக்காலத்திலும் நியாயமான, அம்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவல்ல தீர்வினைத் தரப் போவதில்லை. ஒடுக்கப்படும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் மட்டுமே எமக்கான தீர்வை நாமே பெற்றுக்கொள்ள முடியும். அப் போராட்டத்துக்கான முன்னிலை வகிக்கும் முன்னிலை சோசலிசக் கட்சிக்கு, இத்தேர்தலில் இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் தமது ஆதரவை வழங்க வேண்டும். இடதுசாரிகளின் கைகளைப் பலப்படுத்த சுட்டியல் சின்னத்துக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு சகோதரத்துவத்துடன் வேண்டுகோள் விடுக்கிறோம்.



படிப்பகம்

# இயற்கையை அழிப்பது யார்?

## மார்க்சியம் – 12

இயற்கையை அழிப்பது மனிதன் என்ற பொது கருதுகோள் தவறானது. இயற்கை அழிப்பு ஏன் – எதற்கு – யாரால் – எப்படி என்ற கேள்விகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

இயற்கை அழிப்பு உற்பத்திகான மூலப்பொருட்களுடன் – அதன் வாழ்வியலுடன் தொடர் கொண்டது. உற்பத்திக் கொள்கையானது மனித உழைப்பைச் சுரண்டுவதற்கானது என்ற போதும், அதனுடன் அது முடிந்துவிடுவதில்லை. இடைவிடாது உழைப்பை சுரண்ட உற்பத்தி, – அதற்கு தேவையான மூலப்பொருள் – அதற்காக இயற்கையை சூறையாடுவதுடன் தொடர்புபட்டது. பூமி கொண்டுள்ள இயற்கையின் சாரத்தையும் – அதில் வாழும் மனித சாரத்தையும் மாற்றி அமைப்பதன் மூலம், இடைவிடாது சுரண்டுவது தொடருகின்றது. அதேநேரம் உற்பத்தியாகும் பொருளை பயன்பாடற்றதாக்கி, இயற்கையைச் சூறையாடுவது தொடங்கி இருக்கின்றது. இதற்கு அமைவான இயற்கை – சுற்றுச் சூழல் கொள்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது மறுசுழற்சி – சூழல்சார் சட்டங்கள் – சிறப்பு பிரதேசங்கள் என்று, சமூதாய செயற்பாட்டுகளும் – அறிவும் உருவாக்கப்படுகின்றது.

இந்த பின்னனியில் சுரண்டுவதற்காக இயற்கை தொடர்ந்து அழிக்கப்படுகின்றது. பொருளின் பயன்பாட்டு ஆயுள் அழிப்பதன் மூலம், புதிய பொருளுக்காக இயற்கை அழிக்கப்படுவது அதிகரித்த போக்காக மாறி வருகின்றது. பொருள் தனது பயன்பாட்டை இழந்து கழிவாகுவதும், சுற்றுச் சூழலில் அது நஞ்சாக மாறுகின்றது.

இந்த பின்னனியல் சூழல் அழிவை மறுசுழற்சி மூலம் தடுக்க முடியும் என்பதானது, மூலதனத்தின் உற்பத்தியின் நோக்கத்தையும், அதன் அழிவுக் கொள்கையையும் மூடிமறைப்பதற்கான ஒன்றாகும். உண்மையில் இது

1.பொருள் பயன்பாட்டு ஆயுளை நீடிப்பதன் மூலம், சுற்றுச்சூழலையும் – இயற்கையையும் பாதுகாக்கும் உற்பத்திக் கொள்கையை இது மறுதளிக்கின்றது. அதாவது பொருளின் பயன்பாட்டு ஆயுள் அதிகரிக்கும் போது, உற்பத்தி குறைந்து இயற்கை பாதுகாகப்படும் என்ற உண்மையை மூடிமறைக்கின்றது.

2.மனித தேவையுடன் கூடிய இயற்கையுடன் ஒன்றிய எளிய வாழ்கை மூலம் சுற்றுச் சூழலையும் – இயற்கையையும் பாதுகாக்கும் உற்பத்தி கொள்கையையும் – நுகர்வையும் கூட மறுதளிக்கின்றது.

மறுசுழற்சி மூலமும், மனித நடத்தையில் இருந்து இயற்கையின் சில சிறப்பு மண்டலங்களையும் – சில உயிரிணத் தொகுதிகளையும் தனிமைப்படுத்தி பாதுகாக்கும் பொருளாரதாரக் கொள்கை மூலமும், உண்மையில் இயற்கை அழிப்பது தான் அதன் கொள்கையாகும். இந்தப் பின்னனியில்

1.இது மூலதனத்ததைப் பெருக்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு, இடைவிடாத உற்பத்தியையும் – நுகர்வையும் முன்வைக்கின்றது. அதேநேரம் பொருளின் பயன்பாட்டு ஆயுளை அழிப்பதன் மூலம், இயற்கை சூறையாடுவதையும் – அழிப்பதையும் மறுசுழச்சி கொள்கை முன்வைக்கின்றது.

2.பொருள் பயன்பாடு என்பது தனிமனிதத் தன்மையை வெளிப்படுத்திக் கொள்ளுவதற்கான ஒன்றாகி இருக்கின்றது. ஆடம்பரத்துக்கும் – மற்றவர்களுக்கு போட்டியாகவும் – தகுதி அந்தஸ்தை காட்டிக் கொள்ளும் அடிப்படையில், பொருள் நுகர்தலை முன்வைத்தன் மூலம் இயற்கை வரைமுறையின்றி அழிக்கப்படுவது தொடருகின்றது.

தனிச்சொத்துடமை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை தான் இயற்கையை அழிக்கின்றதே ஓழிய, இயற்கையில் மனிதன் இருத்ததலோ – மனித தேவைகளோ அல்ல. மனிதனை இயற்கையில் இருந்தும் – தேவையில் இருந்தும் அன்னியமாக்கி, இயற்கையை சூறையாடப்படுவது தொடருகின்றது.

### பொருளை பயன்பாடற்ற கழிவாக உணர்வதா மனித பண்பாடுகள்?

அழகியல் – அமைதி – நிம்மதி – மகிழ்ச்சி.. இவையெல்லாம் இயற்கையில் கிடையாது என்பதே, பொருள் உற்பத்தி கொள்கை. அதாவது இயற்கையை அழித்து உருவாகும் செயற்கையான பொருள் உலகில் காணுமாறு மனித உணர்ச்சியை உருவாக்கி, மனித அறிவை மலடாக்கிவிடுகின்றது. இயற்கை மீதான அறிவும் – சூழலும் – வாழ்வும் … அனைத்தும், மனிதனுக்கு அன்னியமான ஒன்றாக இன்று மாறி வருகின்றது. செயற்கையான வரட்சியான பொருள் இனிமையானதாகவும், இயற்கையான குளிர்மை அருவருப்பானதாக உணரும் வண்ணம், உலகம் சுருங்கி வருகின்றது. உயிரற்ற பொருட்கள் அழகானதாகவும் – அலங்கரிக்கப்பட்ட கவர்ச்சி மகிழ்வானது என்று கருதுமளவுக்கு, மனித உளவியல் குறுக்கப்பட்டு வருகின்றது. இந்த பின்னனியில் தனிவுடமையிலான மூலதனத்தைக் குவிக்கின்றவனின் நலன் சார்ந்த உலகமாக, உலகம் குறுகியதாக மாற்றப்படுகின்றது.



மனிதனின் தேவை மறுக்கப்பட்டு, அதனிடத்தில் செல்வத்தை குவிக்க உருவாகும் பொருட்கள் மனிதனின் தேவையாகக் குறுக்கப்பட்டு விடுகின்றது. பொருள் பற்றிய இன்றைய உலககண்ணோட்டம் மனிதனின் தேவைகளில் இருந்து உருவாக்கியவையல்ல. மாறாக தனிச்சொத்துடமையை குவிக்கின்ற வர்க்கத்தின் இடைவிடாத அதன் செயற்பாடுக்கு அமைவானதே, பொருள் உற்பத்தி. செல்வத்தைக் குவிக்க உற்பத்தி செய்த பொருளின் விற்பனைக் கண்ணோட்டமே, மனித நுகர்வாக மாறுகின்றது. இது பொருள் பற்றிய இன்றைய உலகக் கண்ணோட்டத்தைத் தோற்றுவிக்கின்றது.

மனித பயன்பாட்டுத் தேவையின் பெயரிலான உற்பத்தி, மூலதனத்தை பெருக்குவதை மட்டும் இலக்காகக் கொண்டது. பொருளை சந்தையில் வங்கியவுடன் அதன் பயன்பாட்டுக் காலத்தை அழிப்பதன் மூலமே, தொடர்ந்து மூலதனத்தைப் பெருக்க முடியும் என்பதே சந்தை விதியாகின்றது. இதுதான் இயற்கை பற்றி மூலதனத்தின் கொள்கையாகும். இந்த வகையில் பயன்பாடற்ற கழிவாகவே சந்தைக்குள் மூலதனம் பொருளைக் கொண்டு வருகின்றது. இது மனித பண்பாட்டை உருவாக்கின்றது. இந்த பின்னனியில் இயற்கை அழிப்பையும் – சுற்றுச் சூழல் நஞ்சாதலை புரிந்து கொள்ளாத வரை, மறுசுழற்சி என்பது மேற் பூச்சாகும். அறிவு என்பது சுயநலமானது. மனித செயற்பாடு என்பது தன்னலமானது.

மூலதனம் வரம்பின்றியும் – திருத்தியற்றதுமான இடைவிடாத நுகர்வைத் தூண்டி விடுகின்றது. இதன் மூலம் நுகர்ந்தவுடன், பொருளை பயன்பாடற்ற கழிவாக மாற்றிவிடுகின்றது. அதாவது தனிச்சொத்துடமையிலான செல்வத்தை பெருக்கும் உலகக் கண்ணோட்டம், இயற்கையை தொடர்ந்து அழிப்பதன் மூலமான உற்பத்தி முறையை உருவாக்கின்றது.

பயன்பாடற்ற கழிவாகவே, உற்பத்தியான பொருள் சந்தையில் நுழைகின்றது. இதன் அர்த்தம் பொருளின் பயன்பாட்டுக்குரிய காலத்தை பூச்சியமாகி விடுகின்ற கொள்கையின் அடிப்படையில், பொருள் உற்பத்தி தொடங்குகின்றது.

தனிவுடைமையிலான உற்பத்தியின் நோக்கம் என்ன? இடைவிடாத உற்பத்தியும் அதை நுகர வைப்பதன் மூலம் சொத்துடமையை பெருக்குவதே. இது மட்டும் தான் தனிச்சொத்துடமையை பெருக்கும். இதனடிப்படையில் உற்பத்தி என்பது தொடர்ந்து அதிகரிக்க மேலும் மேலும் இயந்திரமாயமாகும் அதை நேரம், அது இடைவெளியற்ற உற்பத்தியாக மாறுகின்றது. அதாவது உற்பத்தி பெருக்கும் தொழில் நுட்பம், இயற்கை அழிப்பதை வேகப்படுத்துகின்றது.

உற்பத்தியின் வேகத்துக்கு எற்ப உற்பத்தியாகும் பொருள், பயன்பாடற்ற கழிவாக மாற வேண்டும். இந்த விதிக்குள் நுகர்வு நடக்கவில்லை என்றால், உற்பத்தி நின்றுவிடும். பொருளின் நுகர்வுக்குரிய காலம் குறைத்து விடுவதே, உற்பத்தி பற்றிய பொது விதியாகி மாறி இருக்கின்றது. இங்கு நுகர்வைத் துண்டுவது மட்டுமல்ல, அதை கழிவாக மாற்றுவதுமாக பொருள் பற்றிய கண்ணோட்டமாகி இருக்கின்றது.

அதாவது உற்பத்தியாகும் பொருள் சந்தையில் பணமாக கை மாறியவுடன், பொருளை நுகர்வோன் கழிவாக உணரவைப்பது தான் உற்பத்தி பற்றிய இன்றைய பொது விதியாகவுள்ளது. சுற்றச்சூழல் அழிவு என்பது, உற்பத்தியின் வேகத்தில் நடந்தேறுகின்றது.

### உற்பத்தியின் நோக்கமே சுற்றுச் சூழலை பாதுகாப்பதா?

தனிநபர்களிடம் சொத்துடமை குவிந்து செல்லுகின்ற செயற்பாட்டுக்கு அடிப்படையாக இருப்பது உற்பத்தி முறைமையாகும். இந்த அடிப்படையில் உற்பத்தியை இடைவிடாது தொடர்வதும், அதைச் சந்தைப்படுத்துவதுமே தனிவுடைமை சமூக அமைப்புமுறையின் அடிப்படையான விதி.

நுகர்வுச் சந்தை என்பது தொடர்ந்து புதுபிக்கப்பட வேண்டும், தொடர்ந்து வாங்குவது நடக்க வேண்டும். அதுவே வாழ்கை முறையாக மாற வேண்டும். பொருளை விதவிதமாக – கவர்ச்சியாக மட்டுமின்றி, தேவைபற்றி பிரமிப்பூட்டும் வண்ணம் தொழில்நுட்ப வசதிகளை கொண்டும், பொருளை இடைவிடாது வாங்குவதை மனித செயலாக்கப்படுகின்றது. மனிதன் பொருளுக்கு அடிமையாகவும், அதுவே மனிதப் பண்பாடுகளை தீர்மானிப்பதாக மாறி இருக்கின்றது.

தொடர்ச்சி 14 பக்கத்தில்



முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

# எங்கள் பிரச்சனைகளைத் தேர்தல் பேசுகின்றதா?




**தேர்தலையே** அரசியலாகக் கொண்ட அரசியல் கட்சிகள், மற்றைய இன மக்களையே எமது பிரச்சனையாகக் காட்டுகின்றன. அதாவது எமது எதிரியாக காட்டுகின்றனர். இதன் மூலம் தமது இன – மத – சாதிய பிரதிநித்துவமான அரசியலை முன்வைக்கின்றனர். ஆனால் மக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில், பிற இன மக்கள் எதிராக, எதிரியாகவோ இருப்பதில்லை.

இப்படி உண்மைகள் இருக்க, நாங்கள் வாழ்கின்ற எமது வாழ்கையைச் சுற்றி வாழ்கைப் பிரச்சனைகளை யாரும் பேசுவதில்லை. எமது வாழ்கையையும், எம்மைச் சுற்றிய வாழ்கைப் பிரச்சனைகளையும் பேசுவதே உண்மையான அரசியலாக இருக்க முடியும். அதை தீர்வு காணும் வழிமுறைகளே, அரசியல் இயக்கமாக இருக்க முடியும்.

அனைவருக்குமான அடிப்படை மனிதவுரிமைகள் கிடையாது, வாழ்கை உத்தரவாதம் கிடையாது. மனிதனை மனிதன் மதிக்காததும், அடிமையாக, ஏற்றத் தாழ்வான முறையில் நடத்துவதுமான வாழ்கை முறை தான் எங்கும் நடந்தேறுகின்றது. "ஐயா", "சேர்" போட்டும், கழுத்துபட்டியை அணிந்து தான், நம் உரிமைகளைக் கூட பெற வேண்டியளவுக்கு, அடிமையான வாழ்கை முறை அரங்கேறுகின்றது.

அதிகாரத்தனத்தைக் வெளிப்படுத்தும் கழுத்து பட்டியும் – சூட்டும் கோட்டும் – சப்பாத்துமாக... சமூகம் மேலும் கீழுமாக பிரிந்து கிடக்கின்றது.

கல்வி, மருத்துவம், குடியிருப்பு, உழைப்பு, போக்குவரத்து, குடிநீர்... என்று அனைத்தையும் சமூகத்துக்கு மறுப்பதும், அதை சிலர் அனுபவிப்பதாகவும், இதை விலைக்கு வாங்கும் சந்தைப் பொருளாகி இருக்கின்றது.

உதாரணமாக இலங்கையின் "ஆச்சரியமான அகன்ற வீதிகள்" யாருக்காக? அந்த வீதியில் நடக்க, நடைபாதை கிடையாது. வெயில் கொடூமையில் இருந்து பாதுக்காக, நிழல் கிடையாது. வீதியை அகட்ட இருந்த மரத்தையும் வெட்டி சாய்த்தவர்கள், அதை மீள நடுவது கிடையாது. வாகன தரிப்பிடம் கிடையாது. இளைப்பாற மரம் இல்லை, வெயில் கொடூமையைப் போக்க குடிக்கக் குடிநீர் கிடையாது. தண்ணிர் கூட கேட்டு குடிக்க முடியாத அளவுக்கு, ஒரு வாய் தண்ணிர் கூட 20 ரூபா. இப்படியிருக்க, அகன்ற வீதிகளை காட்டி நாட்டின் அபிவிருத்தி என்கிறார்கள்..

குளிரூட்டப்பட்ட வாகனத்தில் வந்து இறங்கி, கையில் போத்தல் தண்ணீரைக் குடித்த படி, அபிவிருத்திப் பற்றியும், இனபிரதிநித்துவம் பற்றியும் பிரச்சாரம் செய்து வாக்கு கேட்கின்றார்கள். பைரோ ஜீப்பில் கிராமங்களுக்கு சென்று தாங்கள் சைக்கிள் வழங்கியது பற்றி, தாங்கள் கொடுத்தவற்றைக் கூறி வாக்கு கேட்கின்றார்கள். அகன்ற வீதி முதல், சைக்கிள் வரையான, மக்கள் பணத்தில் கொடுத்ததையே மக்களின் பிரச்சனையாகவும் தீர்வாகவும் காட்டி இன–மத–சாதி ரீதியான வாக்குகளைக் கேட்கின்றனர்.

அரசாங்க மருத்துவமனைக்கு சென்றால் மருந்து கிடையாது. ஒவ்வொரு மருத்துவமனைக்கு முன்னாலும், தனியார் மருந்து விற்பனை நிலையங்கள். மக்கள் மருந்தை வாங்க பணத்துடன் தான், மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். இது அரசியல் பிரச்சனையே கிடையாதா? இலவச மருத்துவமனை என்பது, பெயரளவிலானதாக மாறி வருகின்றது. மருத்துவமனைக்கு மருந்தைக் கொடு என்று, அதைக் கொண்டு வருவேன் என்று கூறி எந்த அரசியல்வாதியும் மக்களிடம் வாக்கு கேட்பது கிடையாது. மருத்துவமனைக்கு சென்றால், நாள் கணக்கில் மக்கள் தூங்கிவழிய வேண்டும். மருத்துவமனைகள் நாயைப்போல் மக்களை கேவலப்படுத்தும் அளவுக்கு, மருத்துவமனை என்பது அதிகார நிறுவனங்களாக காட்சியளிக்கின்றது.

காவல்துறையை எடுங்கள், வாகன போக்குவரத்தைக் கண்காணிக்கும் பிரிவு என்பது, லஞ்சம் வாங்கும் துறையாக மாறி இருக்கின்றது. பொலிஸ் நிலையம் சென்றால், பல மணி நேரம் தூங்கி வழியவேண்யடிளவுக்கு, மக்களை இழிவாக, அடிமைகளாக நடத்துகின்றளவுக்கு அதிகார துஸ்பிரயோகம். இந்த பிரச்சனைக்கு தீர்வு என்ன? இதை அரசியலாக எடுத்து, எந்த அரசியல்வாதிகளாவது பேசுகின்றனரா?

தொழிலுக்கு சென்றால் நேர காலமின்றி வேலை வாங்குவதும், தொழிலுக்கு பதில் "ஐயா – சேர்" என்ற அடிமைகள் போல் தாளம் போட்டு வேலை செய்ய வேண்டிய நிலை. நியாயமான கூலி இன்றியும், அடிப்படை உரிமைகள் இன்றியும் வாழ்கின்ற நிலை. இதைப் பற்றி யார் அக்கறைப்படுகின்றர்கள். எந்த அரசியல், எந்த அரசியல்வாதிகள் பேசுகின்றனர்.

கல்வியை எடுத்தால் இலவசக் கல்வி என்பது தரமற்றதாக சீரழிந்து, அதை தனியார் கல்விக் கூடங்களாக மாற்றுகின்றது. கல்வி என்பது தனியாரிடம் பணம் கொடுத்த வாங்கும் கல்வி முறையாகி, சமூகத்தை காய்யடிகும் கல்வி கொள்கையை எந்த அரசியல் தடுத்து நிறுத்த முனைகின்றது?

இப்படி அனைத்துத் துறையும். சமூகத்தில் சாதி ரீதியான பாகுபாடும், மதரீதியான பிளவுகளும் முதன்மை பெற்று காணப்படுகின்றது. புலம்பெயர் பணத்தில் கொழுக்கும் மதச் செயற்பாடுகள் தொடங்கி யுத்தத்துக்கு பிந்தைய மீள் கட்டைமைப்பு வரை ஊழல்கள்... இப்படி சமூகத்தில் ஆயிரம் பிரச்சனைகள்.

இப்படி சமூகத்தின் வாழ்வு சார்ந்த பிரச்சனைகள் என்பது புரையோடிக் கிடக்கின்றது. இதை எந்த அரசியல்வாதியும் பேசுவது கிடையாது. இதை அரசியல் பிரச்சனையாகக் கூட கருதுவது கிடையாது. ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் இதைச் செய்தியாகக் கூட கொண்டு வருவது கிடையாது.

இவை இன்று அன்றாட சமூகத்தின் நடைமுறை பிரச்சனைகள் மட்டுமல்ல, இது தான் உண்மையான அரசியல் பிரச்சனைகளும் கூட. இதை கையில் எடுத்து போராடும் அரசியலையும், கட்சிகளையும் இனம் கண்டு அணிதிரள்வது இன்றைய தேவையாகும்.

# இந்திய அரசே! டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் சாய்பாபாவை உடன் விடுதலை செய்




டெல்லி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் G.N.சாய்பாபா கடந்த ஆண்டு மகராஸ்டிரா காவல்துறையின் உளவுப்பிரிவினரால் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு பின் பயங்கரவாத கருப்பு சட்டமான UAPA (Unlawful Activities Prevention Act) கீழ் கைது செய்யப்பட்டதாக கூறி சிறையில் அடைத்தது. 90 சதவிகிதம் உடல் இயங்க மறுக்கும் மாற்றுதிரனாளியாகிய இவர் சக்கர நாற்காலியின் உதவியால் மட்டுமே இயங்கக் கூடிய நிலையில் உள்ளவர். கடந்த ஓராண்டுகளுக்கு மேல் நாக்பூர் மத்திய சிறையில் எந்த வித அடிப்படை வசதியும் இல்லாத மின்சாரம் மறறும் யன்னல் வசதி அற்ற இருண்ட அதிக வெப்பமுள்ள "அண்டா செல்" (Anda Cell) எனும் இடத்தில் "பாதுகாப்பு" கருதி அடைக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் அதிபயங்கரவாதி என கருதப்படுவதால் இந்த "அண்டா செல்லில்" அடைக்கப்பட்டுள்ளதாகவும் தப்பித்து செல்லாமல் இருப்பதற்க்காகவும் இவரை இந்த பகுதியில் அடைத்து வைத்துள்ளதாக சிறை நிர்வாகம் கூறுகிறது.

முதுகு தண்டுவடம் பாதித்தும் இரு கிட்னிகளும் செயற்படாத நிலையிலும் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இடது கை செயலற்ற நிலையில் இருக்கும் இவரை இந்திய அரசின் மிகப் பெரும் அச்சுறுத்தலாக இந்திய அரசு இவரை கண்டு அஞ்சுகிறது. மேலும் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் இவர் "கட்ச்ரோலி" (Gadchiroli) மாவட்ட "மாவோயிட்" நக்சல் கமாண்டர் என மிகப்பெரும் பொய்யை நீதிமன்றத்தில் கூறியுள்ளது.

டெல்லி பல்கலைக்கழக ஆங்கில பேராசிரியரான இவர் செய்த மிகப் பெரிய குற்றம் சுவிடன் நாளிதழுக்கு வழங்கிய நேர்காணல்.

"இந்திய அரசினால் 2009–ஆம் ஆண்டில் இருந்து தொடங்கப்பட்ட "பச்சை வேட்டை நடவடிக்கை" (Operation Green Hunt) என்ற பெயரில் இந்திய அரசு எவ்வாறு தனது சொந்த மக்களின் மீது போர் தொடுக்கிறது என்பதையும். கனிம வளம் மிகுந்த பழங்குடிகள் மிகுந்து வாழும் பகுதிகளில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களிற்கு கொள்ளை அடிக்க இந்திய அரசு நிபந்தனை அற்று எவ்வாறு தனது கதவுகளை திறந்து விட்டுள்ளது என்பதையும் இவர்களின் கொள்ளை இலாப வெறிக்கு இடையூறாக இருக்கும் ஏழைகளிலும் ஏழைகளான பழங்குடிகள் மீது நடத்தப்படும் இன அழிப்பு தாக்குதல்களையும் இவர்களை அச்சுறுத்தியும் கொன்றும் இடம்பெயர்வுக்கு எவ்வாறு தள்ளப்படுகிறர்கள் என்பதையும்" சர்வதேச அளவில் அம்பலப்படுத்தியுள்ளார். சர்வதேச அளவில் மிகவும் கண்டனத்துக்கு உட்பட்ட "பச்சை வேட்டை நடவடிக்கை" நிகழ்வு இந்திய அரசிற்கு அவமானத்தை கொடுத்துள்ளது. இதற்கு காரணமானவர்களை பழிவாங்கும் நடவடிக்கையாக முந்தைய காங்கிரசு அரசும் அதன் வழியொட்டிய இன்றைய பாரதிய ஜனதா அரசும் இவரை "எவ்வழியிலும்" வெளியில் வர அனுமதிக்க மறுக்கின்றன. பேராசிரியர் சாய்பாபா அவர்களின் மனைவி கூறுவது போல அவர் உயிருடன் திரும்புவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது என கூறியுள்ளது சாய்பாபாவின் உடல் நலம் எப்படி உள்ளது என்பதற்கு சான்றாக உள்ளதாகும்.

தொடர்ச்சி 15 பக்கத்தில்



படிப்பகம்

# இலங்கை சுதந்திர நாடாவது எப்போது?

இன்று இலங்கையில் வாழும் சாதாரண மக்களின் விருப்பம் அமைதியான—தன்னிறைவான—சந்தோஷமான வாழ்வே. தங்கள் உயிருக்கான உத்திரவாதம்——உயிர் வாழத் தேவையான உடைமைக்கான உத்திரவாதம்—தங்கள் வாழ்வை வளம்படுத்தக் கூடிய பொருளாதார நடைமுறைக்கான உத்திரவாதம்—இவற்றை செயற்படுத்தக் கூடிய அரசியல் அமைப்புத் திட்டம் ஆகியவற்றால் மட்டுமே மக்களுக்கு அவர்கள் விரும்பும் அந்த வாழ்க்கையை வழங்கமுடியும்.

1948ல் இலங்கை சுதந்திரம் பெறவில்லை. "சுதந்திரம்" என்ற பெயரில் அந்நிய ஆங்கில ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை தங்கள் கல்வி முறைமையின் கீழ் மூளைச்சலவை செய்யப்பட்ட உள்நாட்டு ஆளும் மேலாதிக்கவாதக் கனவான்களிடம் பகிர்ந்து கொண்ட நிகழ்ச்சி நிரல்தான் அரங்கேறியது. "போராடி எடுத்துக்கொள்வது சுதந்திரம்—கேட்டுப் பெறுவது அதிகாரப் பகிர்வு"

அன்று தொடக்கம் இந்த அதிகாரப் பகிர்வுதான் எங்களை—இலங்கைக் குடிமக்களை—இலங்கையரை ஆட்சி செய்துகொண்டு வருகிறது. ஆம். 1948ல் சுதந்திர நாடான இலங்கை தொடர்ந்தும் இங்கிலாந்து ராணியின் முடிக்கு கட்டுப்பட்டதாகவே இருந்து வந்தது. 1972ல் ராணியின் முடியைத் துறந்து குடியரசான போது அது சர்வதேச ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டுக்குள் புகுந்தது.



1978ல் இலங்கைக் குடியரசு ஏகாதிபத்தியத்தின் புதிய தாராளவாத பொருளாதாரச் சுரண்டலுக்கு ஏற்றதாக புனரமைப்புச் செய்யப்பட்டு இன்றுவரை அந்தக் கொள்கையின்படியே தனது அரசியலைத் தொடருகிறது.

இந்த ஏகாதிபத்திய அதிகார அமைப்பின் ஒரு அலகாக இயங்கும் இலங்கை அரசுதான் 1948ல் முதல் இன்றுவரை இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட தனது சொந்த நாட்டுக் குடிமக்களைக் கொலை செய்துள்ளது. பல நூற்றுக் கணக்கானோரை காணாமல் போகவும் சிறையில் வாடவும் செய்துள்ளது. தாம் பிறந்த மண்ணிலேயே அக் குடிமக்களை அகதிகளாக ஆக்கிவிட்டுள்ளது. மக்களை நாட்டை விட்டு ஓடும் வகையில் அடக்குமுறைகளை ஏவிவிட்டபடி உள்ளது.

ஏகாதிபத்தியத்தின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அதனுடைய கண்காணிப்புடன் இலங்கை அரசுக் கட்டிலில் மாறி மாறி அமருபவர்கள் தங்களுக்கு இடப்பட்ட உத்தரவுகளுக்கமைய நாட்டில் ஜனநாயக ஆட்சியை ஏகாதிபத்திய எஜமான விசுவாசத்துடன் நடாத்தி வருகின்றனர்.

அவற்றினுடைய ஒரு கட்டம்தான் இன்று இலங்கை அரசியலில் அரங்கேறியபடி உள்ளது. அந்நியரின் ஆட்சிமுறைமையினால் உருவாக்கப்பட்டதே இலங்கையின் இனப் பிரச்சனையாகும். இலங்கை இங்கிலாந்து ராணியின் முடியின் கீழ் இருந்த போது தமிழர்கள் லண்டன் சென்று நீதி கேட்டார்கள். கிடைக்கவில்லை. இலங்கை குடியரசு ஆகிய நாள் முதல் தமிழர்கள் சர்வதேச சமூகத்திடம்——இந்தியாவிடம் நீதி கேட்டபடி அலைகிறார்கள். நீதி கிடைக்காது. காரணம், இலங்கையின் இனப்படுகொலையில் பங்கு சிங்கள அரசுக்கு மட்டும் உரியதல்ல. அதில் தமிழர்களுக்கும் பங்கு உண்டு. சர்வதேச நாடுகளுக்கும் பங்கு உண்டு. இந்தியாவுக்கும் பங்கு உண்டு.

சர்வாதிகார ஆட்சி இலங்கையில் உருவாகும் போதும் சர்வதேசம் பின் துணை நின்றது. இலங்கையில் இன்று "நல்லாட்சி" அமைவதற்கும் அதுதான் கைகொடுத்தது. நாளை இலங்கையில் உருவாகப் போகின்ற ஆட்சியையும் சர்வதேசமே வடிவமைக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதிதான் லண்டனில் அண்மையில் இடம்பெற்ற இலங்கை அரசு—வெளிநாட்டுத் தமிழர்கள் பேச்சுவார்த்தையாகும்.

இந்தப் பேச்சுவார்த்தை ஏன்? எதற்காக? எப்படி? என மக்கள் சிந்திக்க வேண்டும். அதன் ஊடாகத்தான் இலங்கைக் குடிமக்களுக்கு நல்லது கிடைக்கும். இல்லையேல் தொடர்ந்தும் மக்கள் நட்டாற்றில்தான் நிற்கவேண்டி வரும்.

இலங்கையின் இனப் பிரச்சனை சாதாரண சிங்கள—தமிழ் மக்களால் உருவாக்கப்படவில்லை. ஆங்கிலேயராலும் அவர்களின் இலங்கை முகவர்களான சிங்கள—தமிழ் மேட்டுக் குடித் தலைவர்களினாலும் தான் ஆரம்பித்து வளர்க்கப்பட்டு வருகிறது. எனவே அது பற்றி பேசவேண்டியவர்கள் சிங்கள—தமிழ் மக்களேயாகும். ஏனெனில் பிரச்சனையால் பாதிக்கப்படுபவர்கள் அவர்களே. ஆனால் பாதிக்கப்படுபவர்கள் சந்தித்துப் பேசுவதற்கான சகல வழிகளையும் தடுத்து வைக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுத்தபடி இனவாதப் பேச்சுக்களையும்—அறிக்கைகளையும் விடுபவர்கள் அந்நியர் தலைமையில் ஒன்று கூடிப் பேசுவதால் ஆட்சி மாற்றம் மட்டும்தான் ஏற்படும். மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படாது.

ஒரு நாட்டில் அதன் மக்கள் கூட்டத்தின் வாழ்க்கைக்கு அவர்களின் பொருளாதாரக் கட்டுமானமே அடிப்படையானதும் அத்தியாவசியமும் ஆனதாகும். அந்தப் பொருளாதாரத்தை வடிவமைத்து நெறிப்படுத்தி மக்களுக்குப் பயன்படுத்துவதே ஜனநாயக அரசியல் ஆட்சிமுறையாகும். இதனை நீதி நியாயத்துடன் செயற்படுத்த அதற்குத் தகுதியானவர்களை இலங்கைக் குடிமக்கள் விழிப்புணர்வுடனும் விவேகத்துடனும் தேர்ந்தெடுத்து தங்களுக்குரிய ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க ஆணை வழங்கும் வரை இலங்கையர்களுக்கு சுதந்திரம் இல்லை.

இன்று நடப்பதென்ன? இன்றைய நல்லாட்சியின் கதாநாயகர்களாக முன்னைய சர்வாதிகார ஆட்சியின் பங்காளிகளும் விளங்குகின்றனர். இனப் படுகொலைக்கு காரணமானவர்களும்——அதனை நடாத்தி முடித்தவர்களும்—அதற்காக நியாயம் கோரிப் போராடியவர்களும் இவர்களுக்குப் பின்புலத்தில் இருந்து செயற்பட்ட கண்ணுக்குப் புலப்படாத செயற்பாட்டாளர்களும் ஒரு புள்ளியில் இணைந்து நின்று இலங்கையின் அடுத்த ஆட்சியாளர்களையும் ஆட்சிமுறையையும் உருவாக்குவதற்கான திட்டம் பற்றிப் பேசுகிறார்கள். நல்லிணக்கம் என்ற போர்வையின் கீழ் மறுபடி மீண்டும் மக்களை எப்படி பலிக்கடாக்கள் ஆக்குவது பற்றி பேசுகிறார்கள்.

அன்று டொனமூர் ஆணைக்குழு. இன்று ஐ.நா. ஆணைக்குழு. அன்றும் தமிழர் பிரதிநிதிகள் பிரிந்தே நின்றனர். இன்றும் அவர்கள் பிளவுபட்டபடியே நிற்கின்றனர். சுயாதீனச் செயற்பாடற்ற இலங்கை அரசாலும் அதனை அண்டிப் பிழைக்கத் தங்களுக்குள்ளேயே போட்டி போடும் முதுகெலும்பு அற்ற அரசியல் தலைமைகளாலும் தொடர்ந்தும் இலங்கையர்களுக்கு சாவுதான் கிட்டுமே ஒழிய வாழ்வு கிட்டாது.

எனவே இனிமேலாவது குடிமக்கள் தங்களுக்குரிய தன்னிறைவுப் பொருளாதாரக் கட்டுமானங்களையும் அதற்குரிய நாட்டின் வளங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு புதிய அரசியல் பொறிமுறையை நடைமுறையாக்கும் வழியில் குடிமக்களின் சக்தியைத் திரட்டும் அணுகுமுறைக் கூடாக பரிபூரண சுதந்திரம் உள்ள இலங்கையை கட்டியமைக்க உழைக்க வேண்டும்.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# இலங்கையில் தமிழர்களும் பெண்களும்

ஆசியப் பிராந்தியத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட (1931ல்) முதலாவது நாடு இலங்கையாகும்.

1960ல் உலகத்தின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையுடன் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டு 5 ஆண்டுகள் பதவியில் இருந்தார். பின்னர் 1970ல் தெரிவு செய்யப்பட்டு 7 ஆண்டு காலம் ஆட்சி செய்தார். அவரது மகள் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கா 1994ல் பிரதமராகவும் பின்பு இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி என்ற சிறப்புடன் (1994 – 2005) ஆட்சிக்கு வந்த போது சிறிமா அவர்கள் பிரதமராக 14 நவம்பர் 1994 முதல் 9 ஆகஸ்ட் 2000 வரை செயலாற்றினார்.

இவர்களது ஆட்சியின் கீழ் பெண்களுக்கு எதிராக எத்தனையோ கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டிருந்தும் இலங்கையில் பெண்களுடைய உரிமைகளுக்காக இவர்களால் எந்த முன்னெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

இன்றைய இலங்கையின் 2 கோடி மக்கள் தொகையில் 52 சதவீதம் பெண்களேயாகும். இவர்களில் 90சதவீதமானவர்கள் படிப்பறிவு உள்ளவர்கள். நாட்டின் பட்டதாரிகளில் 60 சதவீதம் பெண்களாகும். இன்று 6 லட்சம் பெண்கள் வெளிநாடுகளில் வேலை செய்வதன் மூலம் வருடத்தில் 600 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வருமானமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் 225 உறுப்பினர்களடங்கிய இன்றைய இலங்கைப் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் (13பேர்) 5,8சதவீதமாகும். மாகாணசபை உறுப்பினர்களில் 6 சதவீதமும் உள்ளாட்சி சபைகளில் 2 சதவீதத்திற்கும் குறைவானதும் ஆகும்.

இலங்கையில் தமிழர்களுடைய உரிமைகளுக்கும் உடைமைகளுக்குமான தனிநாட்டுக்கான அரசியல்–ஆயுதப் போராட்டத்திலும் பெண்களுக்கான உரிமைகள் தொடர்பாக ஆழமான கரிசனையோ அன்றி அறிவார்ந்த சிந்தனை–திட்டங்களோ எதுவும் இருக்கவில்லை. இதுவரை இலங்கையில் பெண்கள் சிங்கள–தமிழ் மேலாதிக்கவாத ஆளும் அதிகார வர்க்கத்தினரின் பாவனைக்குரிய பொருட்களாக–பிரச்சார விளம்பரங்களாகவே பாவிக்கப்பட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக நாட்டின் குடிமக்கள் தங்களது இன–மத–சாதி–சமய–பால்––பிராந்திய எல்லைகளைத் தாண்டி பெண்கள் தொடர்பாக பேசியும் எழுதியும் போராட்டங்கள் நடாத்தியும் வருகின்றனர். இதில் பலர் தங்கள் தங்களது பார்வைக்கும்––அறிவுக்கும்–அனுபவத்திற்கும்–ஆசைக்கும்––இச்சைக்கும் ஏற்ற வகையில் பல வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும் ஒரேயொரு கருத்தில் மட்டும் எல்லோரும் ஒரே புள்ளியில் ஒன்று சேர்ந்து நிற்கிறார்கள். "அரசு பெண்களைப் பாதுகாக்க வேண்டும்" என்பதுதான் அந்தப் புள்ளியாகும்.

ஆனால் தமிழர்களின் நல்லுலகத்தில் இந்தப் புள்ளிக்கு ஒரு மெருகூட்டல் செய்யப்படுகிறது. அதாவது "சிங்களஅரசு பெண்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது" என்பதாகும். அதேவேளை தமிழர்கள் சமூகத்தின் மத்தியில் வெளியிடப்பட்டுள்ள பெண்கள்–பெண் அமைப்புக்களின் கருத்துக்களில் அதிகமானவை தங்களின் பாதுகாப்பு அடுத்தவர் கையில்தான் தங்கியுள்ளது என்பதனை வலியுறுத்தியே முன்வைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் மனித சமூகம் பெண்ணை பலவீனமான–பாதுகாக்கப்படவேண்டிய ஒருவர் என்றே பிறப்பிலிருந்து அவளை நம்பவைத்து உருவாக்கி வளர்த்து விட்டுள்ளது. ஆட்சிகளும் அவற்றின் சட்டவாக்கங்களும் அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்துவமும் பெண்ணை ஒரு மனிதனாகக் கருதாமல் அவள் ஆணுக்கு அடுத்த "கீழ்படி" என்பதாகத்தான் வரையறைவு செய்து வைத்துள்ளது.

இப்படியான மனிதக் கூட்டத்தினுள் தமிழர் சமூகம் பெண்களைச் சுற்றி மேலும் மேலும் அதிகமான அடிமை விலங்குகளை அவர்களின் மழலைப் பருவம் தொடங்கியே பூட்டி வைத்துக் கொண்டு வருகின்றனர்.. சாதி–சமய–சம்பிரதாய–பாரம்பரிய––பண்பாடு–கலை–இலக்கிய–குல–கோத்திரம் என்பவை போன்ற பல கதையாடல்களின் ஊடாக பெண்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது சிந்தனையில் தாங்கள் சம உரிமைக்குத் தகுதியற்றவர்கள் என்ற அடிப்படை விதைக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒன்றே ஒன்றாகத்தான் அமைந்துள்ளது. இது இயற்கையின் விதியும் நியதியுமாகும். இதனை ஏன்? எதற்காக? எப்படி? யார்? மாற்றினார்கள் என பெண் சமூகம் சிந்தித்துச் செயற்படுவதனால் மட்டுமே பெண்களும் மனிதர்களாக வாழமுடியும்.

பெற்ற குழந்தை பெண் என அறிந்த அந்தக் கணத்திலேயே தாய்–தந்தையர் முகபாவம் மாறி அவர்கள் அக்குழந்தையை சுற்றி ஒரு வரைவிலக்கணம் வைத்து சுற்றத்தாருக்கு சர்க்கரை கொடுப்பதிலிருந்து பெண்ணுக்குரிய மனித உரிமைகள் பறிக்கப்படும் படலம் ஆரம்பமாகிறது. பாட்டியின்(அரசகுமாரி) கதை–கோயில் வழிபாடு–பரம்பரைப் பழக்கவழக்கங்கள்–பாடசாலைக் கல்வி––விளையாட்டு–பட்டப்படிப்பு எல்லாவற்றிலும் பெண்கள் தரம் பிரிக்கப்பட்டு தாழ்ந்த மனிதராகவே வளர்த்தெடுக்கப் படுகிறார்கள். தனியே செல்லாதே–சத்தம் போட்டு சிரிக்காதே–தலை நிமிர்ந்து பார்க்காதே––தரை அதிர நடக்காதே என மூளைச் சலவை செய்யப்படுகிறார்கள். குழந்தை இல்லையென்றால் மலடி–கணவன் இறந்தால் அறுதலி என்ற பட்டங்கள் சூட்டப்பட்டு அபசகுனச் சின்னமாக்கி ஒதுக்கப் படுகிறாள்.

இன்றைய உலகில் இன்னமும் இவைகளை நடைமுறையில் விடாப்பிடியாக கடைப்பிடிக்கும் ஒரு சமூகத்தில் வாழும்பெண்கள் "கல்லறைக்கு வெள்ளை பூசுவதுபோல்" கருத்துக்களை உதிர்ப்பதும்–அடுத்தவர்களை நோக்கி கோரிக்கை விடுவதும் பெண்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தாது. தனிப்பட்ட பெண்களாலும் பெண்கள் அமைப்புக்களினாலும் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்களில் பல யதார்த்தத்தையும் அவற்றின் பாரதூரத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனால் எதிர்காலத்தில் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைப்பதில் அறிவுபூர்வமான–விஞ்ஞான ரீதியான––நிரந்தரமான–உறுதியான பார்வைகள் அவற்றில் காணப்படவில்லை.

ஒரு நோயை சுகப்படுத்த வேண்டுமானால் அது உற்பத்தியானதற்கான மூல காரணத்தைக் கண்டுபிடித்தாலன்றி அதனைப் பூரணமாக சுகப்படுத்த முடியாது. பரம்பரை பரம்பரையாக ஆணாதிக்கவாத சுரண்டலை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு சமூகத்தில்–அந்த ஆணாதிக்கவாதிகளால் கட்டமைப்புச் செய்யப்பட்டு அதனடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களின் கீழ்––பெண் என்பவள் ஆணுக்குப் பணிந்து நடக்கப் பிறந்தவள் என்பதைப் பெரும்பான்மையான பெண்களே பரிபூரணமாக நம்பி வாழும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் கொந்தளிப்புகளும்––ஆர்ப்பாட்டங்களும்–அணிவகுப்புக்களும்––அறிக்கைகளும் பெண்களுக்கு எதுவித பலனையும் தரப்போவதுமில்லை. தரவும் முடியாது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் மிகவும் சிறிய விகிதாசாரமே வெளியே தெரியவருகிறது. அதிலும் மிகச் சிறிய அளவே சட்டநடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுகிறது. அதிலும் விரல்விட்ட எண்ணிக்கைக்குத்தான் தண்டனை கிடைக்கிறது. அவற்றில் பாலியல் வன்முறைகள் 95 சதவீதமானவை பலவிதமான சமூக அசைவுகளின் கட்டுப்பாடு காரணமாக மூடிமறைக்கப்படுகின்றன. அதனைத் தாண்டி வருபவைகள் தண்டனை வரைக்கும் செல்ல முடியாமல் சட்டமும்––சமூகமும் தடைகளாகி விடுகின்றன.

நிலத்தைப் பண்படுத்தாமல் நல்ல பயிரை விளைச்சல் செய்யமுடியாது. சிந்தனையை மாற்றாமல் செயலை மாற்றமுடியாது. எமது சமூகத்தின் கற்பித்தல் முறையின் அடித்தளம் தலைகீழாக மாற்றியமைக்கப்பட்டால் ஒழிய இந்த அநியாயங்களை நிறுத்தமுடியாது. பெண்ணுக்கு பொட்டும் பூவும் சூடி பூப்புனித நீராட்டு நடாத்துவதை ஏற்றுக் கொள்ளும் பெண் சமூகம் அவர்களுக்கெதிரான வன்முறையை தடுத்து நிறுத்தும் தகைமையை–வலிமையை–துணிச்சலை அடையமுடியாது.

அரிச்சுவடியிலிருந்தே நாம் எமது சமூக மதிப்பீடுகளையும் நீதி நியாங்களையும் பற்றிய சரியான கற்பித்தலை ஆரம்பிக்கவேண்டும். எமது கல்வித் திட்டங்களில் புதிய விஞ்ஞான ரீதியிலான முறைகள் புகுத்தப்படல் வேண்டும். பெண்களும் மனிதர்கள்தான்––எல்லோரையும் போல் வாழப் பிறந்தவர்கள்தான் என்ற நம்பிக்கை பெண்கள் சிந்தனையில் விதைக்கப்படல் வேண்டும். தலை குனிந்து தாலியை ஏற்றுக் கொண்டு நின்று அது பெண்களின் வேலி என்று ஆர்ப்பாட்டம் செய்வதில் அர்த்தம் இல்லை. அநியாயங்களுக்கான அத்திவாரத்தை நாமே நமக்குள்ளேயே மிகவும் இறுக்கமாகக் கட்டிவைத்துக் கொண்டு அதற்கான காரணங்களை அடுத்தவர் மேல் சுமத்தும் எமது வழமையான––பாரம்பரிய–தமிழ் புத்திசாலித்தன சுபாவம் மாற்றப்படவேண்டும்.

பெண்கள் தாங்களும் மனிதர்கள்தான் என்ற உணர்வுடனும்–நாம் யார்க்கும் அடிமையல்லோம் என்ற பற்றுறுதியுடனும் காலாவதியாகிப் போன–மனிதநேயமற்ற––சுயநல சட்டதிட்டங்களையும் அடிப்படை மனித உரிமைகளை மதிக்காத சம்பிரதாயங்களையும் தகர்த்தெறிந்து வெளியேறி வந்து நாட்டின் குடிமக்களுடன் இணைந்து மக்களோடு மக்களாக அவர்களின் புதிய அரச கட்டமைப்பு மாற்றத்திற்கான போராட்ட பாதையில் பங்காளிகளாக ஆவதன் மூலமே தங்களுக்கான பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும்.

பெண்களை சக மனிதராக கருத்தாமல் ஆண்–பெண் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் வரையப்பட்ட அரசியல் சட்ட வரைவும் அதன் மேல் கட்டியெழுப்பப் பட்டுள்ள அரசுக் கட்டுமானமும் பெண்களுக்கு விடிவைத் தராது. நீதி நியாயத்தை வைத்து சாதாரண பாமர–பாட்டாளி மக்களால் உருவாக்கப்படும் புதிய அரச கட்டமைப்பு ஒன்றுதான் பெண்களையும் மனிதர்களாக இந்த மண்ணில் அச்சமின்றி வாழ வழி சமைக்கும்.



படிப்பகம்

# யாழ்ப்பாணத்தில் சமூக நோக்குடைய படிப்பகம் புத்தகக்கடை!!



படிப்பகம் புத்தகக்கடை மற்றும் நூலகம் என்பன 04-07-2015 அன்று யாழ் 411 ஸ்ரான்லி வீதியில் தோழர் இக்பால் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நூலகமானது 15000 மேற்பட்ட ஆவணங்களைக் கொண்ட www.padippakam.com என்ற இணையத்தின் தொடர்சியாகும்.

படிப்பகம் திறப்பினை தொடர்ந்து தோழர் சந்திரகுமார் தலைமையில் கருத்தரங்கம் இடம்பெற்றது. கருந்தரங்கில் தோழர் இக்பால் திருமதி ஞானசக்தி சிறிதரன் திரு ரெங்கன் தேவராஜன் திரு சிறிதரன் (சுகு) திருநாவுக்கரசு திரு கருணாகரன் சிவராசா மற்றும் படிப்பகம் நிறுவனத்தின் சார்பில் தோழர் இரயாகரன் உட்பட பலரும் கருத்துரை நிகழ்த்தினர்.

தோழர் இக்பால் அவர்கள் தனது கருத்துரையில், இன்றைய இளைஞர்களிடையே வாசிப்பு என்பது மிகவும் அருகிவிட்ட விடயமாக உள்ளது. கடந்த காலத்தில் 60வது களில் வடக்கில் நிகழ்ந்த சாதிய ஒடுக்குமுறை காரணமாக மறுக்கப்பட்ட ஆலய பிரவேசங்களுக்கான போராட்டங்கள் மற்றும் தேநீர் கடைகளில் நடாத்தப்பட்ட சாதிய பாகுபாடுகளிற்கு எதிரான போராட்டங்கள் 1ம் 2ம் உலக மகா யுத்தங்கள் ருஸ்ய சீன புரட்சி பற்றியும் மார்க்ஸ் ஏங்கல்ஸ் லெனின் ஸ்டாலின் மாவேசேதுங் எழுதிய மக்களின் விடுதலைக்கான தத்துவங்களை இளைஞர்கள் படிக்க வேண்டும். ஏன் இவற்றை படிக்க வேண்டும் என கேள்வி எழுப்பியதுடன் இந்நூல்கள் எவ்வாறு உழைக்கும் மக்களின் வாழ்க்கை மாற்றி அமைப்பதற்க்கான வழி காட்டிகளாக இருக்கின்றன எனவும் எடுத்து கூறினார்.

மேலும் சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இனவாதம் மதவாதம் கொண்டு மக்களை பிரித்து ஆட்சி செய்து தம்மை




பொருளாதார ரீதியாக கொழுக்க வைப்பதுடன் தொடர்ந்தும் மக்களை ஒன்றிணைய விடாது குழப்பங்களை ஏற்படுத்துவது பற்றி தெரிவித்ததுடன் அண்மையில் நல்லாட்சி தருவதாக கூறி சிறுபான்மை முதலாளித்துவ கட்சிகள் மற்றும் சிறுபான்மை இன மக்களின் பெரும் ஆதரவுடன் பதவிக்கு வந்த மைத்திரி சிறிசேனாவின் நல்லாட்சியில் சிங்கள மக்களிற்கோ அன்றி சிறுபான்மை இன மக்களுக்கோ நல்லாட்சி கிட்டியுள்ளதா என கேள்வி எழுப்பியிருந்தார்.

விரைவில் இன்னும் ஒரு பொதுத்தேர்தல் வரவுள்ளது. இதில் இன்று உள்ள அனைத்து பிற்போக்கு கட்சிகளும் பாராளுமன்றத்திற்கு போய் தாம் மக்களுக்காக சாதிக்க போவதாக வாக்கு கேட்டு உங்களிடம் வருவார்கள். நீங்களும் வாக்கு போட்டு அனுப்பி வைப்பீர்கள் இது தான் காலகாலமாக நடக்கின்றது. இந்த பாராளுமன்றத்தில் சிறுபான்மை இன மக்களின் பிரச்சனைக்கோ உழைக்கும் மக்களின் பொருளாதார பிரச்சினைகளுக்கோ தீர்வு கண்டது உண்டா?

மார்க்சிய ஆசான்கள் எழுதிய பல நூல்கள் இந்த படிப்பகத்தில் உள்ளன. அவற்றை வாங்கி படியுங்கள். எவ்வாறு அவர்கள் முதலாளித்துவத்திற்கு எதிராக போராடி சோசலிச அரசை அமைத்தார்கள் என உள்ளன. கம்யூனிஸ நாடுகளில் இன்று முதலாளித்துவம் மீட்சி பெற்றுள்ளது. இது தற்க்காலிகமானது. அந்த நாடுகளில் மக்கள் மீண்டும் போராடி சோசலிச ஆட்சியை மீள அமைப்பார்கள்.

பிற்போக்குவாத கட்சிகளை ஓரம்கட்டி விட்டு இலங்கையில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலைய மக்கள் ஒன்றிணைந்து ஒரு போராட்டத்தை முன்னெப்பதற்கு இங்குள்ள புத்தகங்கள் பெரிதும் உதவும்.

இந்த படிப்பகம் அமைந்துள்ள கட்டடம் கடந்த காலங்களில் இடதுசாரியத்தை வடக்கில் முன்னெடுத்து செல்வதில் பாரிய பணி ஆற்றிய ஒரு இடம். மீண்டும் படிப்பகம் போன்ற சமூக நோக்குடைய ஒரு புத்தகக்கடை இங்கு ஆரம்பித்திருக்கின்றது. அதனை நன்றாக பயன்படுத்தி அறிவை வளப்படுத்திக் கொள்ளுங்கள் என தெரிவித்தார்.

# யாழில் முன்னிலை சோசலிச கட்சியின் அலுவலகம் திறப்பு



30.06.2015 அன்று யாழ் 413 ஸ்ரான்லி வீதியில் முன்னிலை சோசலிச கட்சியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் சரணடைந்தும் அதற்கு முன்னரும் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பதற்க்கான போராட்டத்தை தோழர் லலித்துடன் சேர்ந்து முன்னெடுத்தமைக்காக மகிந்த அரச படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தோழர் குகன் முருகானந்தனின் மகள் சாரங்கா சிவப்பு நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னிலை சோசலிச கட்சியினை சேர்ந்த தோழர்களும், மக்கள் போராட்ட அமைப்பினை சேர்ந்த தோழர்களும், பத்திரிக்கையாளர்களும், வடபகுதி இடதுசாரிகளுமாக ஏறத்தாழ ஐம்பதுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு இடம்பெற்ற பத்திரிக்கையாளர் மாநாட்டில் உரையாற்றிய முன்னிலை சோசலிச கட்சியின் பொதுச் செயலாளர் சேனாதீர குணதிலக அவர்கள், வடபகுதியில் இடதுசாரியம் மிகவும் பலம் வாய்ந்த அமைப்பாக முன்னர் ஒருகாலத்தில் இருந்ததனை சுட்டிக்காட்டியதுடன், தோழர் சண்முகதாசன் அவர்களால் நடாத்தப்பட்ட பாரிய போராட்டங்களின் தொடர்ச்சியாக வடபகுதியில் இடதுசாரியம் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று இருந்ததனை நினைவு கூர்ந்தார். கடந்த 30 வருடங்களிற்கு மேலான இனவாத யுத்தம் இடதுசாரியத்தை அதன் வளர்ச்சியை பின்தங்க வைத்து விட்டது. இடதுசாரியத்தை மீண்டும் வடபகுதியில் மீட்டு வளர்த்து செல்வதற்க்கான நம்பிக்கையான தொடக்கமே இந்த அலுவலக திறப்பு என தெரிவித்ததுடன், இந்த அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு ஒரு இடதுசாரிய பாராம்பரியம் உண்டு. முன்னர் இந்த கட்டிடத்தில் கம்யூனிச கட்சியின் செயற்பாடுகள் பல நிகழ்ந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து உரையாற்றிய மக்கள் போராட்ட அமைப்பின் தோழர் கிருபானந்தன் தருமலிங்கம் அவர்கள் இடதுசாரியம் தோற்று விட்டது என கூறுகின்றனர். அது உண்மையல்ல. இடதுசாரிகள் என்று கூறுபவர்கள் இடதுசாரிய நடைமுறையினை கைவிட்டு விட்டு வலதுசாரிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றனர். இனப்பிரச்சனை, சாதியபாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்து மக்கள் விடுதலை அடைய தீர்வுகளை கொண்ட ஒரே வழி இடதுசாரிய மாற்றீடு மட்டுமே என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னிலை சோசலிக் கட்சியின் பிரச்சார செயலர் புகுது ஜெயக்கொட சமவுரிமை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஜோர்ச் பெர்ணான்டோ புள்ளே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அன்று மாலை 3 மணிக்கு முன்னிலை சோசலிச கட்சியின், "இடதுசாரிய நடவடிக்கை" எனும் தமிழ் மொழி மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது யாழ் பொது நூலகத்தில் அமைந்துள்ள உணவக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இடதுசாரி கட்சிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் என 75 பேர்கள் அளவில் கலந்து கொண்டனர்.

முன்னிலை சோசலிச கட்சி பொதுச் செயலாளர் சேனாதீர குணதிலக புத்தகத்தை வெளியிட்டு வைக்க, முதலாவது பிரதியினை



புதிய ஜனநாயக மாக்சிய லெனிய கட்சி செயலாளா தோழர் செந்தில்வேல் அவர்கள் பெற்றுக் கொண்டார். அதனை தொடர்ந்து வருகை தந்திருந்த அனைவரும் புத்தத்தினை பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து நிகழ்ந்த கருத்தரங்கில் தோழர்கள் புகுது ஜெயகொட, கிருபாகரன் தருமலிங்கம் ஆகியோர் கருத்துரை ஆற்றினார்கள்.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# நிலத்தைப் பொறுத்ததே விளைச்சல்...



இலங்கையில் வாழும் குடிமக்களில் சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு உள்ளது போல் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் சம உரிமை பெற்றுத் தருவோம் எனக் கூறி எமது தமிழ்த் தலைமைகள் அரசியல் கட்சிகள் அமைத்து ஜனநாயகப் பாதையில் அகிம்சை முறையிலும் வன்முறைப் பாதையில் ஆயுதப் போராட்ட நடவடிக்கையிலும் ஈடுபட்டு இறுதியில் தமிழ்ப் பேசும் மக்களைக் கட்டிய கோவணமும் இன்றி நிர்வாணமாக்கி அவர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணிலேயே அனாதைகளாக, அகதிகளாக, சிறைக் கைதிகளாக ஆக்கிய வரலாறே இலங்கைத் தமிழர்களின் கடந்த 67 ஆண்டு காலச் சரித்திரமாகும்.

தமிழர்களின் இன்றைய நிலைமைக்குக் காரணம் எமது தலைமைகள்தான் எனக் கூறித் தொடர்ந்தும் மக்கள் தங்களுக்குத் தாங்களே குழிதோண்டிக் கொண்டு இருக்க முடியாது. இதற்கான முழுப் பொறுப்பும் மக்களையே சார்ந்துள்ளது. நாமும் எமது சுயநலப் போக்கும் அதனடிப்படையிலான எமது செயற்பாடுதான் இன்றைய எமது பரிதாபகரமான நிலைமைகளுக்கான காரணம். மக்கள் மத்தியில் இருந்துதான் தலைவர்கள் தோன்றுகிறார்கள். நாம்தான் மக்கள் தலைவர்களையும் மாமனிதர்களையும் உருவாக்குகிறோம். எமது அபிலாசைகளுக்கு ஏற்றதாகவே அவர்களை நாம் தெரிவு செய்கிறோம். எங்கள் மனங்களின் உள்ளார்ந்த வெளிப்பாட்டைத்தான் எமது தலைவர்கள் பிரதிபலிக்கிறார்கள்.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் வழங்கப்படும் சுதந்திரம், நாட்டைப் பிளவுபடுத்தும் – நாட்டு மக்களை அடிமைகளாக ஆக்கும் – நாட்டின் வளங்களைச் சுரண்டும். ஆகவே மொழியைக் காட்டி இனவாதத்தை ஊட்டி மக்களை மோத வைக்கும் அந்நியரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குத் துணை போக வேண்டாம் என அன்றைய இளைஞர்களின் அறிவார்ந்த முற்போக்கான கோரிக்கைகளை புறந்தள்ளி பிற்போக்கான அரசியல் பாரம்பரியம் உருவாக 1931ல் எமது முதலாவது வாக்குப் பிரயோகத்தைப் பயன்படுத்தினோம். அன்று தொடங்கிய எமது அரசியல் தெரிவுகள் இன்று வரை எமக்குப் பெற்றுத்தந்த உரிமைகள் ஏதும் உண்டா? இல்லை. எதுவுமேயில்லை. மாறாக இருந்த யாவற்றையுமே இழந்து நிற்கிறோம். வாக்குரிமை – குடியுரிமை–நிலவுரிமை – தொழில்உரிமை – கற்கும் உரிமை–வாழும் உரிமை–பேசும் உரிமை எனப் படிப்படியாக இழப்புக்களைத்தான் எமது வாக்குகள் எமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளன. கல்வியில் சிறந்தவர்கள் என உலகம் போற்றும் நாம் எப்படி எமது இன்றைய அரசியல் சூழலுக்கு ஆளானோம். அறிவு–ஆற்றல்–துணிச்சல் யாவும் நிறைந்திருந்தும் ஏன், எப்படி, இன்று அகதிகளானோம்? இவற்றிற்கான பதில்களில்தான் எங்களுடைய இன்றைய வாழ்வும் எங்கள் சந்ததிகளுடைய எதிர்கால வாழ்வும் தங்கியுள்ளது.

"உயிர் தமிழுக்கு.., உடல் மண்ணுக்கு.. " என முழங்கி உணர்ச்சி ஊட்டியவர்களும் அவர்களின் சுற்றுவட்டாரத்தினரும் உலகவலா வந்துகொண்டிருக்கிறார்கள். அதனை உள்வாங்கி உணர்ச்சிவசப்பட்டு உழைத்த பல்லாயிரக் கணக்கான மக்களில் உயிரிழந்தவர் போக ஏனையோர் உருக்குலைந்து வாழ வழியின்றி உள்நாட்டில் அனாதைகளாகவும் உலக நாடுகளில் அகதிகளாகவும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் சொந்த நலன்களை முன்னிறுத்தி சாதி–சமய–வர்க்க–பிராந்தியக் கண்ணோட்டத்துடனேயே இன்றுவரை எமது வாக்குகளை பயன்படுத்தி வந்துள்ளோம். நாம் இன்று வரை பின் தொடர்ந்து வந்தது தமிழ் மக்களுக்கான அரசியலாக இருந்திருந்தால் இன்றைய பிளவுபட்ட, ஆளை ஆள் காலை வாரிவிடுகின்ற, கடைக்கு எதிர் கடை வைக்கும் அரசியல் பித்தலாட்டங்கள் ஏற்பட்டிருக்காது.

சற்று சிந்தனை செய்து பார்ப்போம். சிங்களப் பேரினவாதத்தின் பாகுபாடு––பாரபட்சம்–அடக்குமுறை–கைது–சிறை––கொலை இவைகளுக்கு எதிராகவே நாம் நீதி கேட்டு போராடிக் கொண்டிருக்கிறோம். அதே வேளை தமினத்துக்குள்ளேயே தமிழர்களால் தமிழர்கள் மேல் மேற்குறிப்பிட்ட அத்தனை அநியாயங்களும் நடாத்தப்பட்டுள்ளன. சிங்கள மேலாதிக்கத்தின் அநீதிகளுக்கு இனவாதம் என்று பெயரிடப்பட்டால் தமிழர்களுக்குள் இடம்பெற்றுள்ள அநீதிகளுக்குப் பெயர் என்னவாக இருக்கும்? அதுதான் மேட்டுக்குடித் தமிழர்களின் ஆளும் மேலாதிக்க சாதிவாதம். சிங்களப் பேரினவாத தீச்சுவாலை எம்மைத் தீண்டமுன்னரேயே தமிழர்கள் மத்தியில் பாடசாலைகள் கொழுத்தப்பட்டுள்ளன. கொலைகள் இடம்பெற்றுள்ளன. கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டுக் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. மக்கள் கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவற்றைச் சிங்கள ஆட்சியாளர்கள் கண்டும் காணாமலும் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர்.

"தானத்திலும் சிறந்த தானம் தண்ணீர் தானம்" என எழுதி வைத்தவர்கள் எமது முன்னோர். ஆனால் எமது தமிழர் தாயகப் போராட்ட காலத்திலும் கூட ஒரு பகுதி மக்களுக்கு தாகத்திற்குக் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடிக்கும் உரிமையும் குடியிருக்க நிலத்தடி உரிமையும் மறுக்கப்பட்டிருந்தது ஏன் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இன்றும் கூட வன்னியிலும் குடாநாட்டிலும் தீவுப்பகுதிகளிலும் மக்களின் தாகம் தீர்க்கும் குடிநீரை வைத்து அரசியல் செய்து ஆதாயம் தேடும் நபர்கள்தான் எமக்கு தலைவர்களாக விளங்குகிறார்கள். இதுவே ஆளும் வர்க்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி என்ற தந்திரோபாயம். அந்நிய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இலங்கைக் குடிமக்களை சிங்களம்–தமிழ் எனப் பிரித்தனர். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்ப் பேசும் மக்களை இந்தியத்தமிழர்––முஸ்லீம்கள்–இலங்கைத் தமிழர் எனப் பிரித்தனர். தமிழ் ஆளும் மேலாதிக்க மேட்டுக் குடியினர் தமிழர்களை சாதி–சமயம்–பிராந்தியம் எனக் கூறு போட்டனர்.

இலங்கையில் வாழும் தமிழர்களில் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் இன்றும் சிங்கள மக்கள் மத்தியில்தான் வாழ்கிறார்கள். ஒருசில சிங்கள–தமிழ் மேட்டுக்குடிப் பரம்பரையினர் வாழவும் பல லட்சக்கணக்கான சாதாரண சிங்கள–தமிழ் மக்கள் உழைத்துச் சாகவும் வேண்டி எமது தலைமைகளினால் பயன்படுத்தப்படும் இனவாதம் என்ற பூச்சாண்டியை இல்லாதொழிக்கவேண்டும். அதற்காக நாம் அரசியலை எமது கையில் எடுக்க வேண்டும். அரசியலை நாம் கையில் எடுப்பதற்கு உரிய அறிவை எமது ஆங்கிலேய கல்விமுறைமை எமக்கு வழங்கவில்லை. மாறாக வெள்ளையருக்கு அடிமையாக சேவகம் புரியவேண்டும். அதுவே எமது வாழ்வின் இலட்சியம் என்கிற மனப்பான்மை மட்டும்தான் எமது மரபணுவில் பதியப்பட்டுள்ளது. அதனால்தான் படிபடி எனப்படித்து எப்படியும் டாக்டர், என்ஜினியர் ஆகி வெளிநாடு போய் அந்நியர்களுக்கு சேவகம் செய்ய விரும்புகிறோம். பொருளாதார அடிமைத்தனம் எமது வயிற்றில் அடிக்கிறது. அரசியல் அடிமைத்தனம் எமது தன்னமானத்தைக் காயப்படுத்துகிறது. ஆனால் மனதிலான அடிமைத்தனம் எமது இனத்தின் ஆன்மாவையே கொன்றுவிடுகிறது. இது 1931ல் எமது முன்னோர் கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகள். இதனால்தான் நாமே நம்மை அடிமைப்படுத்தும் ஒரு அரசியல் பாதையில் பயணம் செய்கிறோம்.

1948லிருந்து நாம் சிங்கள அரசுடன் இணக்க––எதிர்ப்பு அரசியல் இரண்டையும் சமாந்தரமாகவே நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறோம். இதன் மூலம் ஒரு சில மேட்டுக் குடிகளும் அவர்கள் வழித் தோன்றல்களும் பலனடைய நாட்டு மக்கள் பரிதவிக்கும் நிலையே இன்று எற்பட்டுள்ளது. இந்த மக்கள் விரோத அரசியலை தொடர்ந்தும் நாம் ஆதரிக்க வேண்டும் எனக் கூறி அதற்கான விளக்கங்களும், விளம்பர அறிக்கைகளும், வீராவேசமான உரைகளும் எதிர்வரும் தேர்தலையொட்டி மக்கள் மத்தியில் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மைத்திரி வல்லவர் செய்வார், ரணில் நல்லவர் தருவார், இந்தியா வாங்கித் தரும், ஐ.நா. புடுங்கி அடுக்கும்.., என்றெல்லாம் வழமை போல தங்கள் வாதத் திறமைகளைக் காட்டத் தொடங்கிவிட்டனர். ஆனால் இலங்கையின் இனப்பிரச்சனைக் கணக்கைத் தீர்ப்பதற்கான சமன்பாட்டில் சிங்கள மக்களின் தரவு தேவை என்பதை இம்முறை தேர்தலில் பாமரபாட்டாளி மக்களாகிய நாம் உலகத்திற்கு உணர்த்த வேண்டிய நேரம் இதுவேயாகும். இல்லையெனில் "இந்து மகா சமுத்திரத்தின் முத்து" மேல் ஏகாதிபத்திய கரங்களுடைய நகத்தின் கீறல்கள் விழுவது தவிர்க்க முடியாதது.




படிப்பகம்

# சாதி மேலாதிக்கவாதத்தின் உற்பத்திப் பொருளே இனவாதம்...

**1930ல்** பாடசாலைகளில் மாணவர்களுக்கு சரியாசனமுறை அமுல்படுத்தப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் அதனை அமுல்படுத்திய பாடசாலைகளை உயர்சாதியினரும், அதனை அமுல்படுத்தாத பாடசாலைகளை பாதிக்கப்பட்ட சாதியினரும் தீ வைத்துக் கொழுத்தினர்.

இதனையடுத்து "இந்துசபை" பிரமுகர்கள் கூட்டு அமர்வு மற்றும் சமஅந்தஸ்து அமர்வு என்ற வழிமுறையை முன்மொழிந்தனர். இது தொடர்பாக இராமநாதன் கல்லூரியில் சேர்.பொன்.இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிள்ளைகளுக்கு வாங்குகள் வழங்கப்பட்டால் எந்த ஒரு மாணவனையும் வித்தியாசமாக நடத்தக்கூடாது என விதிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கொள்ளவேண்டும் என பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் சரியாசன முறை தவிர்ப்பும் அதேவேளை பாடசாலை தீ வைக்கப்பட்டால் அதற்கான நஷ்டஈட்டை சட்டப்படி பெற்றுக் கொள்ளும் வழியும் அடங்கியிருந்தது.



பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் சகல சாதி ஆசிரியர்களும் ஒரே மண்டபத்தில் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்துவதற்கு எதிர்ப்புக் கிளம்பியதனை அடுத்து சேர்.பொன்.இராமநாதன் தலைமையில் ஒரு குழுவினர் ஆளுனரைச் சந்தித்தனர். அதன் போது பாடசாலைப் பிள்ளைகள் பற்றி பேச்சு வந்தபோது எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்பதே ஒழிய எல்லாப் பிள்ளைகளும் ஒரே ஆசனத்தில் அமர வேண்டும் என்பதல்ல சரியாசனம் என்பதற்கான சட்ட விளக்கம் என்று குடியேற்றச் செயலாளர் தனது முடிவைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் தனது எதிர்ப்பைத் தெரிவித்து பிறப்பு, தொழில், சொத்து போன்றவற்றின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை நிராகரித்து பாடசாலைகளில் சரியாசன முறை அமுல்படுத்தும் கல்வித்திணைக்களத்தின் உத்தரவை வரவேற்று இத்தைகைய அநீதியான பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கு நாட்டுமக்கள் உழைக்க வேண்டும் என்கிற வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்துடன் காங்கிரஸ் 1931ல் டொனமூர் அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட இருந்த தேர்தலை மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என பிரச்சாரம் செய்தது. இந்த பகிஷ்கரிப்புக்கான அடிப்படை சிந்தனைகளை முன்னாடியே 1930ல் அது தனது மாநாட்டில் தெளிவாக முன்வைத்திருந்தது.

அரசியல் என்பது வெறுமனே காய் நகர்த்தல்கள் மற்றும் சமரசங்கள் அல்லது விருப்பு வெறுப்புக்கள் மீது விளையாடுதல், அடுத்த தேர்தலை மனதில் வைத்துப் பயணித்தல், அரசாங்கத்திடமிருந்து நல்ல பெயரெடுத்தல் ஆகிய அம்சங்கள் அடங்கலானவை என்பதனால் மாணவர் காங்கிரஸ் அதனை வெறுத்து நிற்கின்றது. புதிய அரச சபையில் வடக்கு எத்தனை ஆசனங்களை பெறப்போகின்றது என்பதில் எமக்கு சிறிதும் அக்கறையில்லை. பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் மட்டுமே தேசிய ஒற்றுமைக்கு இட்டுச் செல்லுமே ஒழிய ஆசனங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாக நாம் நடந்து கொண்டால் இதனை எய்தமுடியாது. இந்தப் போராட்டமானது பொருளாதார கலாச்சார மற்றும் அரசியல் ரீதியாக எம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அதிகாரவாதத்திற்கு எதிரானதாகும். எனவே நாட்டின் ஒரு பிரிவினர் தமது சொந்த நலனுக்காக அரசாங்கத்தோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தால் இந்தப் போராட்டத்தை நாம் உறுதியாக முன்னெடுக்கமுடியாது. சாதி முறையை ஒழிப்பதற்கு பாடுபட்டால் ஒழிய மறுமலர்ச்சி, சுதந்திரம், ஆன்மீக விழப்புணர்வு மற்றும் தேசிய மரபு என்பவற்றைப் பேசுவதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகும்.

தற்போதைய முறைமையின் கீழ் பணம் சம்பாதிப்பவர்கள் தமது செல்வச் செழிப்பானது மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் வறுமை என்னும் மேட்டில் நின்று கட்டி எழுப்பப்பட்டு வருகின்றது என்பதை மறந்து விடுகின்றனர். பொருளாதார அடிமைத்தனம் எமது வயிற்றில் அடிக்கிறது. அரசியல் அடிமைத்தனம் எமது தன்மானத்தைக் காயப்படுத்துகிறது. ஆனால் மனதிலான அடிமைத்தனம் எமது இனத்தின ஆன்மாவையே கொன்றுவிடுகிறது. மேலே கடைசியாகக் கூறிய நிலைமை உருவாகுவதற்கு எமது கல்வி முறைமையும் பெரிதளவில் தாக்கம்செலுத்தி உள்ளது. இந்த இளைஞர்களை அன்று ஆதரித்த கனவான்கள் பலர் பின்னர் தேர்தலில் பங்கு பற்றி அரசசபைக்கு தெரிவாகினர். அதன் மூலம் சாதியையும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் பெண்ணடிமைத்தனத்தையும் இனரீதியான அரசியலையும் இல்லாதொழிக்க இயங்கிய இளைஞர் காங்கிரசின் வளர்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி இட்டனர். அன்று முதல் தமிழர்களுக்குள் நிலவிய அடக்குமுறைகளை, உரிமை மறுப்புக்களை மூடி மறைத்து "தமிழரசு" என்னும் மந்திரக் கோலைக் காட்டி மக்களை இன்றைய நாள் வரை மயக்கி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து காங்கிரசின் முன்னோடிகளில் சிலர் சிங்கள மக்களை தலைவர்களாக கொண்டிருந்த இடதுசாரி கட்சிகளில் இணைந்து செயற்படத் தொடங்கினார்கள். அவர்களுடைய அன்றைய வர்க்க அரசியல் செயற்பாடுகளினூடாக 1960களுக்குப் பின்னால் யாழ்ப்பாணத்தில் சாதிய அமைப்பு முறைமைக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

1966ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி(சீனச்சார்பு) பொன்னாலைக் கிராமத்தில் ஐ.தே.கட்சி(தமிழரசுக் கட்சி ஆதரவுடன் செயற்பட்ட) அரசாங்கத்தினால் கிராம மக்களுக்கென வழங்கப்பட்டிருந்த குழாய் நீரை ஒடுக்கப்பட்ட சாதியினர் பயன்படுத்துவதை உயர்சாதியினர் தடை செய்ததனை எதிர்த்து மக்களைத் அணி திரட்டி ஒரு போராட்டத்தை நடாத்தி வெற்றி பெற்றது. இப்போராட்டத்தில் சாதி வெறியர்களினதும் அரச படைகளினதும் தாக்குதல்கள் மூலம் தாங்கள் அடைந்த அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு அக்கட்சி தொடர்ந்து 67–68களில் "சாதியமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்.." என்ற தாரக மந்திரத்துடன் மேலும் பல உயிர்பலி கொடுத்த போராட்டங்களை (அடிமை குடிமைமுறை ஒழியட்டும்... ஆலய தேநீர்க்கடைப் பிரவேசம் தொடரட்டும்.. என்ற பதாகையுடன்) முன்னெடுத்தது. அதில் மக்களை பாதுகாக்க வேண்டி தற்பாதுகாப்பு அடிப்படையில் ஆயுத வன்முறையையும் கையாண்டது. இதுவே தமிழர்கள் வரலாற்றில் இலங்கை அரசின் அடக்குமுறைக்கு எதிராக முதன் முதலாக ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டம் ஆகும்.

இப்போராட்ட வரலாற்றில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலும் (நிச்சாமம்), உடுப்பிட்டித் தொகுதியிலும் (கன்பொல்லை) சாவகச்சேரி தொகுதியிலும் (கொடிகாமம்) இடம்பெற்ற வன்முறைகள், உயிரிழப்புக்கள், மக்களின் ஒருமைப்பாடு என்பன இலங்கையின் வரலாற்றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும். இப்போராட்டங்களின் போது தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் மேலாதிக்க சாதிகளுக்கு அனுசரணையாகவே செயற்பட்டனர். தமிழர்களின் உரிமைகளுக்காக தமிழரசைக் கோரியவர்களுக்கு ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றிய மனிதாபிமானப் பார்வை கூட இருக்கவில்லை. இவர்களின் இந்த மேலாதிக்க சாதிவாத அணுகுமுறைக்குப் பதிலடியாக 1970ன் பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டையில் திரு. அமிர்தலிங்கத்தையும் உடுப்பிட்டியில் திரு. சிவசிதம்பரத்தையும் பாமரபாட்டாளி மக்கள் வீட்டுக்கனுப்பினார்கள். அந்தப் படிப்பினையால் 1977ன் தேர்தலில் ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்த திரு.இராசலிங்கத்தை உடுப்பிட்டியில் நிறுத்தி வெற்றிபெற்றனர்.

இந்த அரசியல் வரலாற்றுப் பின்னணியுடன்தான் 1970களில் சிங்கள இனவாத அரசின் இனப்பாகுபாட்டு ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஆயுத நடவடிக்கை பற்றி தமிழ் மாணவர்கள்

**தொடர்ச்சி 15 பக்கத்தில்**



படிப்பகம்

# துரோகம்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாறாத கொள்கை!!!

தமிழ்நிலம் எங்கும் இலங்கை அரசுகளால் கொல்லப்பட்ட தமிழ்மக்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. குளங்களில், ஏரிகளில் எமது மக்களின் குருதி உறைந்து போயிருக்கிறது. கூதல் காற்றில் இலைகள்



உதிர்ந்து விழுவது போல எமது வாழ்வு வீழ்ந்து கிடக்கிறது. இத்தனைக்கும் காரணமான இலங்கையின் இனவெறி அரசுகளுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூடிக் குலாவும். இனப்படுகொலையாளிகளான இலங்கை இராணுவத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து வன்னிப்படுகொலையை நடத்தி முடித்த சரத் பொன்சேகாவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்த விதக் குற்ற உணர்வும் இன்றி தேர்தலில் ஆதரித்தது. இனப்படுகொலையாளி மகிந்தாவின் அமைச்சரவையில் அமைச்சராகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்த மைத்திரி சிறிசேனாவுடன் அது எந்த விதக் கூச்சமும் இன்றி கூட்டு வைத்தது.

ஆனால் முன்னாள் போராளிகளை கட்சியில் சேர்த்தால் அதன் புனிதம் கெட்டுவிடுமாம். தமிழ் மக்களிற்கு ஒரு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காகவே உயிர் வாழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இலட்சியப் பயணத்திற்கு முன்னாள் போராளிகள் பெரும் தடையாக இருப்பார்களாம். முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் இணைத்துக் கொள்வதால் கட்சிக்கு பாரிய சிக்கல் நிலை உருவாகும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியில் ராஜதந்திர மட்டத்தில் பேசிவரும் இச்சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் இணைந்துக்கொள்வது உசிதமானதல்ல. ஆகையினால் இந்த முடிவினை கூட்டமைப்பு ஒருபோதும் எடுக்காது என சம்பந்தனின் திருவாசகங்கள் தெரிவிக்கின்றன.

வலதுசாரித் தலைமைகள் ஒரே வர்க்கம் என்ற அடிப்படையில் எப்பொழுதுமே மக்களின் எதிரிகளுடன் கூட்டுச் சேருவார்கள். ஆனால் போராளிகளுடன், புரட்சியாளர்களுடன் என்றைக்குமே தமது பிற்போக்குத்தனத்தின் காரணமாக பகைமை கொள்வார்கள். பிரித்தானிய காலனியக் கொடுங்கோலர்களை எதிர்த்ததினால் தமது வாழ்வின் பெரும்பகுதியை மூடிய சிறைகளின் இருள்வெளிகளிற்குள் வாழ்ந்த இந்திய சுதந்திரப் போராளியும், பொதுவுடமைவாதியுமான மன்மதநாத் குப்தா தமது, "அவர்கள் அபாயத்தில் வாழ்கிறார்கள்.." என்ற தமது போராட்ட வரலாற்றுப்பதிவில் காந்தியும், காங்கிரசும் எவ்வாறு பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்திருந்தார்கள், எவ்வாறு போராட்டங்களை காட்டிக் கொடுத்தார்கள், எவ்வாறு போராளிகளை புறம் தள்ளினார்கள் என்பதை வலியுடனும், வேதனையுடனும் பதிவு செய்கிறார்.

பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்ற புரட்சியாளர்களுடன் லாகூர் சிறை வைக்கப்பட்டிருந்த ஜதீன் தாஸ் என்ற போராளி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வீரமரணம் அடைந்தார். மிகவும் எளிதாக அவர் விடுதலை அடைந்திருக்க முடியும். அவருக்கு பிணை நிற்க முன் வருபவரிடம் அவரது மறுப்பை தெரிவிக்காமல் இருந்திருந்தால் போதும். ஆனால் அவ்வாறு செய்ய மறுத்து விட்டு தனது மரணத்தை தழுவினார். அவரது மரணம் நாடு முழுவதும் வருத்தத்தையும், மனக்கொதிப்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தியது. ஆறு இலட்சம் மக்கள் அவரது இறுதிப்பயணத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

நாடு முழுவதும் மிகப்பெரும் அளவில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருந்தது. ஆனால் காந்தியும், காங்கிரசும் மூன்று குரங்குகளைப் போல வாய் பொத்தியிருந்தார்கள். கண்களை மூடியிருந்தார்கள். காதுகளை மூடியிருந்தார்கள். இது தொடர்பாக சுபாஷ் சந்திரபோஸ் பின்வருமாறு எழுதினார். "நாட்டின் இதயத்தையே அசைத்து விட்ட ஜதீன் தாசின் தியாகம் காந்தியிடம் எத்தகைய மனப்பதிவையும் ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாக தெரிந்தது. தான் வேண்டுமென்றேதான் கருத்துக் கூறாமல் இருந்து விட்டதாக காந்தி கூறினார். ஏனென்றால் அவ்வாறு தான் கருத்து கூறியிருந்தால் அது சாதகமற்ற முறையில் தான் இருந்திருக்கும் என்று கூறினார்".

ஆனால் இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக இருந்த வைஸ்ராய் இர்வின் பிரபுவைக் கொல்ல புரட்சியாளர்கள் தொடுத்த தாக்குதலைக் கண்டு காந்தி மனம் பதைபதைத்துப் போனார். காந்தியின் காங்கிஸ் கட்சி பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றியது. வைஸ்ராய் பயணம் செய்த வண்டியின் மீது தொடுக்கப்பட்ட வெடிகுண்டு தாக்குதலை காங்கிரஸ் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் தேசிய குறிக்கோள்களிற்கு ஊறு விளைவிக்கும் என்ற உறுதியான கருத்தை காங்கிரஸ் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது. வைஸ்ராய் மயிரிழையில் தப்பியது குறித்து காங்கிஸ் கட்சி தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறது.

போராளியின் உயிர்த்தியாகத்தை புறக்கணித்த காந்தி தேசிய குறிக்கோளைக் காட்டி பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச ரீதியில் ராஜதந்திர மட்டத்தில் பேசிவரும் இச்சூழலில் முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் இணைந்துக்கொள்வது உசிதமானதல்ல. ஆகையினால் இந்த முடிவினை கூட்டமைப்பு ஒருபோதும் எடுக்காது என சம்பந்தன் சொல்கிறார். மகிந்த ராஜபக்சாவுடன் சேர்ந்து கொன்ற இந்தியாவும், அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் தான் இந்த சர்வதேசம். இத்தனை ஆயிரம் மக்களை துடிக்க துடிக்க கொன்ற போது வராத சர்வதேசம் இனி வந்து தமிழ்மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்குமாம். போராட்டங்களை காட்டிக் கொடுப்பவர்கள் எப்போதும் ஒரே மாதிரித் தான் பொய் சொல்கிறார்கள்.



# இனவாத அரசியலின் பணயக்கைதிகள்



ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள் தமிழ் ஆளும் அதிகார மேலாதிக்கவாத சக்திகளை வைத்தே இலங்கையை–இலங்கைக் குடிமக்களை––இலங்கையரைக் கட்டி ஆண்டுவந்தனர். 1920 முதல் இந்திய சுதந்திரப் போராட்டம்—மகாத்மா காந்தியின் கருத்துக்கள் ஆகியவற்றின் தாக்கம் இலங்கையின் வடபகுதியில் உள்ள இளைஞர்கள் மத்தியில் மிகவும் முற்போக்கான சிந்தனை வளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இதனுடைய விளைவாக பின்னாட்களில் "யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்" தோற்றம் பெற்றது.

இந்த இளைஞர்கள் 1924 முதல் 1940 வரை இதற்கு இடைப்பட்ட காலத்தில் சிங்கள––தமிழ்–இந்திய துறை சார்ந்த அறிஞர்களை யாழ்ப்பாணம் வரவழைத்து ஆண்டு தோறும் மாநாடுகளை நடாத்தினர். முன்கூட்டியே அவர்களுக்கு ஆங்கலேயர்கள் "சுதந்திரம்" என்ற பெயரில் மக்களை ஆளும் ஆட்சி அதிகாரத்தை இலங்கையின் சுதேச ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தினரிடம் கையளித்து விட்டுப் போகவிருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தது. அதுமட்டுமல்லாமல் இனமுரண்பாடுகள் வளர்வதற்கான அரசியல் சூழல்களையும் உருவாக்கி வைத்துவிட்டுச் செல்வார்கள் என்பதும் நன்கு புரிந்திருந்தது.

எனவே இலங்கையின் "விடுதலை" இன–சாதி––சமய–பால் பாகுபாடற்ற "இலங்கையர்" என்ற தேசிய இனத்திற்குரிய பூரண சுதந்திரமாக அமையவேண்டும் என்பதே அவர்களின் இலட்சியமாக இருந்தது. அதனை இலக்காக வைத்தே அவர்கள் கடுமையாக உழைத்தார்கள். 1928ல் இடம்பெற்ற மாநாட்டில் சுவாமி விபுலானந்தர் வழங்கிய தலைமையுரையில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

"பொருளாதார முன்னேற்றம் இல்லாவிட்டால் பொறுப்பு வாய்ந்த அரசாங்கமானது சிலுசிலுப்பே தவிர பலகாரமாய் இருக்கமுடியாது. நாட்டின் வங்கி மற்றும் வணிகத்துறைகள் முற்று முழுதாக வெளியார் கைகளிலே உள்ளன. நாட்டின் செல்வத்தின் பெரும் பகுதியும் அவ்வாறாகவே உள்ளது. அவர்கட்கு நாட்டு நலனில் நிரந்தர அக்கறை கிடையாது. சுரண்டலில் ஈடுபடும் ஐரோப்பியர்கள் வருவார்கள். போவார்கள். அரசாங்கம் நாட்டைக் கட்டியெழுப்புமென நம்பி நாம் கைகட்டி நிற்பதற்கான காரணம் அந்நியர் ஆட்சியின் கீழ் நமக்குள் படிந்துள்ள அடிமை மனப்பான்மையே. இந்த அடிமை மனப்பான்மையை மாற்றுவதன் ஊடாகவே நாட்டு மக்கள் தங்கள் விடுதலையை வென்றெடுக்க முடியும்."

அதே மாநாட்டில் இந்தியாவிலிருந்து வந்து மாநாட்டில் அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய சிறீ சத்தியமூர்த்தி ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறியிருந்தார்.

"இனவாதம் என்பது முற்றிலும் சுயநலம் கொண்ட குறுகிய சிந்தனையாகும். நஞ்சு போன்று ஆபத்து நிறைந்ததாகும். அதன் இயல்பே அதுதான். அது தேசியவாதத்திற்கு முற்றிலும் முரண்பாடானதாகும். இனவாதப் பாதையை நாடுபவர்கள் ஆட்சியாளாகளின் வெட்கமில்லாத கருவிகள் அல்லது அவர்கள் பெரிய பொறுப்புக்களில் உள்ளவர்களின் பரிவின் மூலம் பட்டம் பதவிகளை விரும்பி நிற்பவர்கள் ஆவர். அரசியலுக்கு நஞ்சூட்டவல்ல இனவாதத்தை யாழ்ப்பாண இளைஞர்கள் நிராகரிக்க வேண்டும்"

மேற்கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் செயற்பட்ட இளைஞர்களின் இலட்சியங்கள் வெற்றிபெறாத வகையில் அன்று செயற்பட்ட சிங்கள–தமிழ் அரசியல் தலைமைகள் இன்றுவரை இனவாத தண்டவாளத்தில் தங்கள் சுயநல––சுரண்டல்–சுத்துமாத்து அரசியல் பயணத்தைத் தொடருகின்றன. இவர்களது பாதுகாப்பான பயணத்துக்கு உத்தரவாதம் வழங்கும் பணயக் கைதிகளாக இலங்கைக் குடிமக்கள் கடந்த 67 ஆண்டுகளாக இவர்களால்சிறை வைக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலேயர்கள் இலங்கையை விட்டுச் செல்லும்போது திருகோணமலைக் கடற்படைத் தளத்தை தன் கையில் வைத்துக் கொண்டுதான் சுதந்திரத்தை வழங்கினார்கள். அந்த தைரியத்திலேதான் அன்றைய அரசு மலையக மக்களை நாடற்ற அகதிகளாக்கி அடிமைகளாக்கிக் கொண்டது. அந்த நடவடிக்கையும் அதன் தொடர்ச்சியும் இன்றுவரை இந்தியாவுக்கு இலங்கையில் மூக்கை நுழைக்கும் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலங்கையின் இனப் பிரச்சனையில் இந்தியா "பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும்" தாயாக இன்று வரை செயற்பட்டுக் கொண்டு வருகிறது.

இலங்கை அரசு சிங்கள இளைஞர்களின் (இரு தடவைகள்) ஆயுதக் கிளர்ச்சிகளையும் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தையும் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் அடக்கி மக்களைக் கொன்று குவித்தது. இன்று மனித உரிமைகள் என்ற மந்திரத்துடன் உலகமயமாக்கல் பொருளாதார பொறிமுறை புதிய தாராளவாத பொருளாதார திட்டங்களை நாட்டில் நடைமுறைப்படுத்துகிறது. இலங்கை ஆளும் வர்க்கம் மக்களைப் பிணை வைத்துப் பேரம் பேசுகிறது. சர்வதேச ஆளும் வர்க்கங்கள் மனித உரிமையைக் காட்டி ஒப்பந்தங்களை போடுகின்றனர். இந்த அரசியல் சதுரங்கத்தில் சிங்கள–தமிழ் தலைமைகள் சொகுசாக வாழ்கின்றனர். இலங்கைக் குடிமக்கள் வதைபட்டுச் சாகின்றனர்.

இன்றைய இலங்கை அரசு இந்தியாவை விரோதித்துக் கொள்ளாமலும் அதேவேளை அதற்குப் பணிந்து நடக்காமலும் செயற்படக் கூடியதான போக்கை தனது சர்வதேச நாடுகளுடனான நட்புறவின் மூலம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இதற்கு "நல்லாட்சி" ஜனநாயகம் என்ற கதையாடல் பயன்படுத்தப்படுகிறது. இதன் பின்னால் புதிய தாராளவாதப் பொருளாதாரம் இலங்கையில் படு தீவிரமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இந்தப் பின்னூட்டத்துடன்தான் இன்றைய நாட்டு நடப்புக்களையும் எதிர்வரும் பொதுத் தேர்தலை நோக்கிய இலங்கையின் அரசியல் நீரோட்டங்களையும் கணிப்பீடு செய்வது அவசியமாகும்.

இலங்கையில் இதுவரை நான்கு (சிங்களவர் –தமிழர் –இஸ்லாமியர் ––மலையகத்தவர்) பிரதான பிரிவுகளாக மக்கள் பிளவுபடுத்தப்பட்டு வந்துள்ளனர். இவற்றுக்கு மேலாக கொள்கை அடிப்படையில் மக்கள் இந்தப் பிரிவுகளுக்குள் இன்னும் பல்வேறு அணிகளாக முரண்பட்டுக்கொண்டு நிற்க வைக்கப்பட்டுள்ளனர். இம்முறை தேர்தலை எதிர்கொள்வதற்காக மேலும் பல புதிய அணிகட்டுதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

இன்றைய இலங்கை அரசியல் மொழியில் தமிழர் என்பது வடமாகாண தமிழரின் யாழ் மேலாதிக்கவாத ஆளும் வர்க்க சிந்தனையாளர்களின் அடையாளமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிழக்குமாகாணத் தமிழர்கள் தமிழர் என்ற அடையாளத்திலிருந்து சிறிது தூரம் தள்ளி வைக்கப்பட்டுள்ளனர். முஸ்லீம்கள் அதன் எல்லைக் கோட்டிலும் மலையகத்தவர் அதற்கு(தமிழருக்கு) வெளியேயும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சிங்கள இனவாத மேலாதிக்கவாத முதலாளித்துவ சக்திகள் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் அடிப்படையில் தங்களுக்குள் பல்வேறு அணிகளாகப் பிரிந்து சிங்கள மக்களை முட்டி மோத விட்டபடி வழமை போல் "தமிழர்" என்ற பூச்சாண்டியைக் காட்டி ஆட்சியைக் கைப்பற்றும் தந்தரோபாயங்களில் ஈடுபட்டுள்ளனர்.

1951ல் ஐ.தே.கட்சியில் இருந்து வெளியேறி எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா சி.சு.கட்சியை ஆரம்பித்து சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் என்ற போதையை ஊட்டி வளர்த்தார். 1949ல் அ.இ.த.கா. கட்சியிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே. வி.செல்வநாயகம் இ.த.அ.கட்சி அமைத்து தமிழ் மக்கள் மத்தியில் இனவாதம் என்ற நஞ்சை ஊட்டினார்.

இந்த இரு பக்க இனவாதங்களும் அந்நிய ஆங்கிலேய ஆக்கிரமிப்பு சக்திகளுடைய ஆலோசனையுடனும் ஆசீர்வாதத்துடனும் சிங்கள–தமிழ் தலைமைகளினால் உருவாக்கப்பட்டு இன்றுவரை போஷித்து வளர்த்தெடுக்கப்பட்டு வருகிறது. சிங்கள––தமிழ் மக்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு இலங்கையராக உணர்ந்து நின்று நாட்டின் அரசியல் போக்கை மாற்றவேண்டி உழைப்பவர்களை–அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பவர்களை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில்தான் இன்றைய அரசியல் தலைமைகள் செயற்படுகின்றன.

"சிலந்தி வலையைப் பின்னி வைத்து சிறுசிறு பூச்சியைப் பிடிக்குதையா பலரைச் சிலபேர் பணிய வைக்க பணம்தான் வலையாய் உதவுதையா"

வழமைபோல் இம்முறையும் கொள்கையின் பெயரால் மக்களைச் சுரண்டி நாட்டின் வளங்களினால் வரும் வருமானத்தைக் கொள்ளையடிக்கும் ஜனநாயக தேர்தல் சடங்கு அரங்கேறப் போகிறது.

**தொடர்ச்சி 15 பக்கத்தில்**



முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

**13 பக்கம் தொடர்ச்சி**

நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் இன்னமும் அமுலில் உள்ளது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு 6 வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால் அதனுடன் தொடர்புடையவர்கள் என்ற வெறும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக் உட்படுத்தப்பட்டு வழக்கு விசாரணை இன்றி 25 வருடங்களுக்கும் மேலாக சிறையில் வாடும் கைதிகள்நூற்றுக் கணக்கில் உள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நல்லாட்சி ஜனநாயக அரசும் யோசிக்கவில்லை. அவர்களை விடுவிக்க அரசியல் தலைமைகளுக்கும் தேவை காணப்படவில்லை. அதேவேளை தடைச் சட்டம் அப்பாவி மக்களைத்தான் வேட்டையாடியதே ஒழிய பயங்கரவாதத்தை ஊட்டி வளர்த்த—அதனைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாடிய எந்த ஒரு தலைவர் மீதும் இதுவரை கை வைக்கவில்லை. மாறாக அவர்களுக்கு அரச பாதுகாப்பும் ராஜதந்திர கடவுச் சீட்டும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த தமிழ் தலைமைகளுக்கு நீதிக்காக—நியாயத்திற்காக—சிறையிருப்போருக்காக—காணாமல் போனோருக்காக—கொல்லப்பட்டவர்களுக்காக—மக்களின் உரிமைகளுக்காக—பெண்களின் பாதுகாப்புக்காக பேசக்கூடத் தகுதி கிடையாது. அதற்கான பரிபூரண தகுதியும்—உரிமையும் அவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே உண்டு. இந்த தலைமைகளும் இவர்களுடைய வாரிசுகளும் வழங்கிய சுயநல—சுயலாப பின்னூட்டங்கள்தான் மக்களை நந்திக்கடல் வரை பயணிக்கச் செய்தது.

நாம் நீதி கேட்கவேண்டியது சிங்கள மக்களிடமே. காரணம் அவர்களால்—அவர்களுடைய வாக்குகளால் உருவான அரசாங்கமே அநியாங்களை இழைத்து வருகிறது. அதனை ஒருமுறை பரீட்சித்துப் பார்ப்போம் என்று கூட சிந்திக்க மறுத்து மீண்டும் மீண்டும் அயலவரிடமும் அந்நியரிடமும் முறையிட்டபடியே தான் நாம் நமது பிழைப்பை நடாத்துவோம் என அடம் பிடிக்கிறார்கள்.

இதனை சுவாமி விபுலானந்தர் சுமார் 87 வருடங்களுக்கு முன்னர் தீர்க்கதரிசனமாக உணர்ந்து கொண்டதால்தான் என்னவோ 1928ல் கீரிமலையில் நின்று இவ்வாறு கூறியிருந்தார்.

"அரசாங்கம் நாட்டைக் கட்டியெழுப்புமென நம்பி நாம் கைகட்டி நிற்பதற்கான காரணம் அந்நியர் ஆட்சியின் கீழ் நமக்குள் படிந்துள்ள அடிமை மனப்பான்மையே. இந்த அடிமை மனப்பான்மையை மாற்றுவதன் ஊடாகவே நாட்டு மக்கள் தங்கள் விடுதலையை வென்றெடுக்க முடியும்."

அதே கீரிமலையில் விபுலானந்தர் அடிகளாருடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று சிறீ சத்தியமூர்த்தி அவர்களும் தனது தூரநோக்குப் பார்வையில் எமது அரசியல்வாதிகளை பின்வருமாறு கணிப்பீடு செய்திருந்தார்.

"இனவாதப் பாதையை நாடுபவர்கள் ஆட்சியாளர்களின் வெட்கமில்லாத கருவிகள் அல்லது அவர்கள் பெரிய பொறுப்புக்களில் உள்ளவர்களின் பரிவின் மூலம் பட்டம் பதவிகளை விரும்பி நிற்பவர்கள் ஆவர். அரசியலுக்கு நஞ்சூட்டவல்ல இனவாதத்தை யாழ்ப்பாண இளைஞர்கள் நிராகரிக்க வேண்டும்"

கொழும்பில் அரசியல் கைதிகளை விடுதலை செய் என கட்சி—இன—மத—பால் வேறுபாடின்றி குடிமக்களினால் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்ட மறுநாள் காலையில் "300 கைதிகளை விடுதலை செய்வதாக ஜனாதிபதி உறுதி அளித்துள்ளார்" என வடக்குத் தலைவர்கள் அறிக்கை விடுகிறார்கள். இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவாக ஒரு கூட்டமைப்பு தேவை என தெற்கிலிருந்து வேண்டுகோள் விடப்பட்டு இறுதியில் வட—கிழக்குக்கு வெளியே வாழும் 15 லட்சம் தமிழ்ப் பேசும் மக்கள் சார்பாக முன்னணி அமைக்கப்பட்டதாக செய்திகள் வந்ததும் வடகிழக்குக்கு வெளியேயும் தங்கள் வேட்பாளர்களை களமிறக்கப் போவதாக யாழ் தலைமைகள் அறிவித்துள்ளன.

மக்களின் நலன் கருதி செயற்படும் 12 பலதரப்பட்ட வெகுஜன அமைப்புக்களும் 52 தனிப்பட்ட சமூக ஆர்வலர்களும் இணைந்து ஜனவரி 8ல் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து பொதுத் தேர்தலை உடன் நடாத்துமாறு கடந்த யூன் மாதம் 5ம் திகதி அன்று ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர். "நல்லாட்சி ஜனநாயக" அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளை அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியும் உள்ளனர்.

இலங்கையையும் அதன் மக்களையும் பணயமாக வைத்து வெளிநாடுகள்—வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள்—இவர்களின் முகவர்களாக நாட்டுக்குள் செயற்படும் அரசியற் பிரமுகர்கள் ஆகியோர் சுயலாபம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டின் செல்வம் ஒரு சிறிய தொகையினர் கைகளில் குவிய வறுமை நாடு தழுவிய மக்கள் தலைகளில் சுமத்தப் பட்டபடியே ஜனநாயக ஆட்சிமுறை சென்றுகொண்டிருக்கிறது.

இனியாவது இலங்கைக் குடிமக்கள் இணைந்து நின்று தங்கள் வாழ்வை நிர்ணயம் செய்யும் அரசியல் அதிகாரத்தை தங்களது கையில் எடுப்பதற்கான விழிப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும். இல்லையேல் "மறுபடி மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது" போல் 67 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று ஒப்பந்தங்கள் கையொப்பம் இடும் படலம் ஆரம்பமாகும். இலங்கை குடிமக்களின் இன்னொரு தலைமுறை மீண்டும் ஒருதடவை அழித்தொழிக்கப்படும்.

**1 பக்கம் தொடர்ச்சி**

6.தமது உரிமைகளிற்க்காக மக்கள் வீதிகளில் இறங்கினால் அரச ஆயுதபடைகள் மூலம் போராட்டம் ஒடுக்கப்படுகின்றது.

உழைக்கும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக கடந்த நான்கு வருடங்களிற்கு முன்னர் உருவான முன்னிலை சோசலிச கட்சி தொடர்ச்சியாக நவதாராளவாத பொருளாதாரத்தின் அபாயத்தை மக்களிடம் பிரச்சாரப்படுத்தி வருவதுடன், மக்கள் மாணவர்கள் விவசாயிகள் மற்றும் மீனவர்களுடன் இணைந்து பல போராட்டங்களை உயிர் இழப்புகளுடன் முன்னெடுத்து வருகின்றது.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகளின் விவகாரத்தை தமிழ் அரசியல் கட்சிகள் தமது அரசியல் தேவைக்காக பேரம்பேச மட்டுமே பயன்படுத்தி வருகின்ற வேளையில், முன்னிலை சோசலிச கட்சி வெகுசன அமைப்பான சமவுரிமை இயக்கத்துடன் இணைந்து தெற்கிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தன் மூலம், இதனை சர்வதேச மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

பேருவளையில் முஸ்லீம் சகோதரர்கள் மீது அரச குண்டர்களால் இனவாதத் தாக்குதக்குள்ளாகிய போது, சமவுரிமை இயக்கத்துடன் இணைந்து அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்த கண்டன ஆர்ப்பாட்டத்தை, கொழும்பில் நடாத்தியது.

தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாக சுயாட்சியை தீர்வாக முன்வைத்து, இனவாதத்துக்கு எதிராக இன ஐக்கியத்தினை வலியுறுத்தி பெரும்பான்மை இன மக்களிடம் பிரச்சாரம் செய்யும் ஒரே கட்சி முன்னிலை சோசலிச கட்சி.

முன்னிலை சோசலிச கட்சியானது உழைக்கும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்த எத்தகைய தியாகங்களையும் செய்யக் கூடிய ஒரு கட்சியாகவே உருவான காலம் முதல் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மாறி மாறி முகத்தை மாற்றி ஆட்சி புரிந்தவர்கள் எவரும் இந்த நாட்டின் பிரச்சனைகள் எதனையும் தீர்த்துள்ளார்களா? மாறாக தாம் பொருளாதார ரீதியாக கொழுத்துள்ளதுடன் அந்நிய நாடுகள் நாட்டின் வளங்களை சூறையாட வழி திறந்து விட்டுள்ளது தெளிவானது.

அன்று குடும்பம் – இன்று கூட்டு – நாடோ குழப்பத்தில். எனவே முகமாற்றம் போதும் அமைப்பு மாற்றத்திற்கு தயாராவோம்.

மக்களின் அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளை தனது கொள்கையாகக் கொண்டு போராடும் ஒரு இடதுசாரிய கட்சியினை வளர்த்தெடுக்க, முன்னிலை சோசலிசக் கட்சிக்கு வாக்களிப்பது மக்களை நேசிக்கின்ற அனைவரதும் இன்றைய கடமையாகும்.

**3 பக்கம் தொடர்ச்சி**

பெற்றுக்கொண்ட அறுதிப் பெரும்பான்மை ஆட்சி அதிகாரம் கொண்ட மாகாணசபையின் சகல நலன்களையும் தாங்கள் அனுபவித்தபடியே மக்களின் தலையில் மிளகாயை அரைத்தபடி அடுத்த வாக்கு வேட்டைக்காக ஆளுக்கு ஆள்—கட்சிக்கு கட்சி அம்புலிமாமா கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமைக்கு தலைமைகள் மட்டும் காரணம் இல்லை. நாமும்தான் இதற்குத் துணையாக இருந்துள்ளோம்.மக்களாகிய நாம் எமது ஜனநாயகக் கடமையைச் செய்யவில்லை. இதுவரை வாக்குளை நாம் பொது நோக்குடன் போடவில்லை. இருந்த எமது வாக்குரிமையைப் பயன்படுத்தவில்லை. பணத்தை மட்டும் குறி வைத்துச் செயற்பட்டோம். அதனை வைத்தே நல்லது கெட்டதை அளந்து பார்த்தோம். அவர் சொன்னார்—இவர் சொன்னார் என நம்பினோம். இன்று யாரை நம்புவது? என கலங்கித் தவிக்கிறோம்.

இந்நிலையை நாம் மாற்றமுடியும். அதற்கான வழிமுறைகள் வரலாறு முழுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. எம்மை நாமே ஆட்சிசெய்யும் உண்மையான ஜனநாயக அரசியல் நடைமுறையை நாமே உருவாக்க உழைப்பதன் மூலமே எமது எமது சந்ததிகளுக்கு ஒரு வளமான வாழ்வை அமைத்துக் கொடுக்க முடியும்.

ஓட்டுப் போடுவதால் ஒன்றும் மாறப்போவதில்லை எனக் கூறி "நல்லவர்கள்" வீட்டில் இருப்பதனால்தான் "கெட்டவர்கள்" நாட்டைக் குட்டிச்சுவராக்கி தாங்கள் சுகபோகம் அனுபவிக்கிற அநியாயம் தொடருகிறது. அவர்களின் அடக்குமுறை எம்மை நசுக்குகிறது. இதற்கு ஒரு முடிவு காணப்படல் வேண்டும். இழந்தது போதும். இனி இழப்பதற்கு எம்மிடம் எதுவுமேயில்லை.

எனவே மக்களின் நலனுக்காக தன்னலமின்றி உழைப்பவர்களை—நியாயத்திற்காகத் தங்கள் உயிரையும் இழக்கத் தயாராக நின்று செயற்படுபவர்களை நாட்டின் அரசியல் இயக்குநர்களாக—எமது பிரதிநிதிகளாக—நாட்டின் நிர்வாகிகளாக நாமே தெரிவு செய்ய வேண்டும்.

இன—மத—சாதி—பால்—பிராந்திய அடிப்படையிலான உணர்ச்சிகரமான வெற்றுக் கோஷங்களை நிராகரிப்போம். எமது மரணங்களையும் மனக் குமுறல்களையும் தங்கள் பிழைப்புக்கு மூலதனமாக்கும் சுத்துமாத்து அரசியலுக்கு ஒரு முடிவு கட்டுவோம்.

எமக்காக—குடிமக்களுக்காக மரணித்தவர்களை மனதில் நிறுத்தி மக்களுக்காக—மக்களின் உடைமைகளுக்காக—மானிட உரிமைகளுக்காக உழைப்பவர்களின் கரங்களைப் பலப்படுத்துவோம். இந்தப் பலத்தை—மக்களின் மாபெரும் சக்தியை உருவாக்குவதன் ஊடாக மட்டுமே நாம் சமாதானமும்—சுபீட்சமும்—சந்தோஷமும் உள்ள மனிதர்களாக வாழமுடியும். இதற்காக நாம் வாக்குரிமையை பயன்படுத்தும் எமது கட்டாயக் கடமையை நிறைவேற்றுவோம்.

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"



படிப்பகம்

11 பக்கம் தொடர்ச்சி

சிந்திக்கத் தலைப்பட்டனர். ஆரம்பத்தில் அந்தச் சிந்தனை மக்களை மையப்படுத்தாத அரச அடக்குமுறைகளுக்குப் பழிக்குப் பழி வாங்கும் சிந்தனையாகவே அமைந்திருந்தது. இதே காலப் பகுதியில்தான் தென்னிலங்கையில் 1971ல் இலங்கை அரச அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான சிங்கள இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி இடம்பெற்றது. அதில் பல்லாயிரக்கணக்கில் இளைஞர்கள், யுவதிகள் கொல்லப்பட்டனர். இந்த நிலைமையை அவதானித்த ஆளும் மேலாதிக்கவாத தமிழரசுவாதிகள் தீர்க்கதரிசனத்துடன் செயற்பட்டார்கள். தங்கள் சுயலாப மேலாதிக்க சாதிவாத அரசியலுக்கு எதிராக இடதுசாரிப் பாதையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட நடைமுறைகள் போய்விடக்கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தார்கள்.

இளைஞர்களின் அரசியல் முதிர்ச்சியின்மையையும் அதேவேளை அவர்களின் தீவிரத்தன்மையையும் நாடிபிடித்தறிந்து கொண்ட தமிழரசுத் தலைமைகள் 1972ல் இலங்கை குடியரசானதைத் தொடர்ந்து 1974ல் "தமிழர் ஐக்கிய கூட்டமைப்பு" ஆரம்பித்து 1976ல் வட்டுக்கோட்டையில் "தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி"யாக பரிணாமம் பெற்று 1977ல் "தமிழீழ சோசலிசக் குடியரசு" அமைப்போம் என்பதற்கான மக்கள் ஆணையையும் தேர்தலில் பெற்றுக் கொண்டார்கள். சாதிப் படி நிலைகளை தக்கவைத்து அதனை தொடர்ந்து பாதுகாப்பதற்காக கட்டியெழுப்பட்ட தமிழரசின் முன்னோடிகளும் மூத்த மேட்டுக்குடித் தலைவர்களும் சேர்ந்து சோசலிசக் குடியரசைப் பிரகடனப்படுத்தியமை ஒடுக்கப்பட்ட மக்கள் இடதுசாரியப் பாதையில் போராட்டத்தை முன்னெடுப்பதனை தடுப்பதற்காகவேயாகும். இதனூ டாக பின்னர் வந்த காலங்களில் இடதுசாரி சிந்தனையுடன் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலையை முன்னெடுக்க உழைத்த இயக்கங்கள் அழிக்கப்பட்டு வெறும் இனவாத யுத்தம் தொடர வழி சமைத்துக் கொடுத்தார்கள்.

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக நடாத்தப்பட்டிருக்க வேண்டிய ஆயுதப் போராட்டத்தை வெறுமனே தமிழீழம் என்ற நிலப்பரப்பை கைப்பற்றுவதற்கான இனயுத்தமாக மாற்றி, மலையகத் தமிழர்களை ஒதுக்கி வைத்து, தமிழ் மக்களை பிளவுபடுத்தி–ஒரு பகுதியினரை அழித்து, இன்னொரு பகுதியினரை வெளிநாடுகளில் தஞ்சம் கோர வைத்து, இஸ்லாமிய தமிழர்களை அவர்களின் சொந்த மண்ணை விட்டு விரட்டி தமிழர்களை வடக்கு கிழக்காகப் பிரித்து.., இன்று தமிழர்களை சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களிடம் மண்டியிட்டு வணங்கி நிற்கும்படி செய்தவர்கள் இந்த தமிழரசு பாரம்பரியத்தை உருவாக்கிய ஆளும் மேலாதிக்க சாதிவாதப் பரம்பரையினரேயாகும். தமிழீழ விடுதலையை நம்பி 1995ல் குடாநாட்டிலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த போது நாவற்குழி பாலம் கடந்த பின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு நிலமும் தாகத்திற்கு கிணற்றுத் தண்ணீரும் மறுக்கப்பட்ட வரலாறு ஒன்று உண்டு. இதே வரலாறு வன்னிப் பேரழிவுப் பின்னணியிலும் புதையுண்டு கிடக்கிறது என்பதற்கு யுத்தத்தில் உயிர் தப்பிச் சரணடைந்து சிங்களச் சிறைமுகாம் பட்டிகளில் அடைக்கப்பட்ட மூன்றரை லட்சம் தமிழ் மக்களே சாட்சி. சாதாரண பாமரபாட்டாளி மக்களின் உரிமைகளை மறுத்து தங்களுடைய சாதி மேலாதிக்கவாத அதிகார ஆட்சிக்காக இந்த இனவாத யுத்தத்தை நாளும் பொழுதும் உற்சாகப்படுத்தி ஊட்டச்சத்து வழங்கி முண்டு கொடுத்து முரசறைந்து வளர்த்து மக்களின் உரிமைகளை மதிக்காத மண்ணை மீட்டெடுத்து அதனை தங்கள் ஏகபோகச் சொத்தாக்குவதற்கான அரசியலை முன்னெடுத்தவர்கள் இந்த தமிழரசுக் காவிகளே.

இவர்கள் கோருகின்ற "சுயநிர்ணய உரிமை" என்பது ஆளும் தமிழ் மேலாதிக்க சாதிவாத மேட்டுக் குடிகள் தமிழர்களை பிரித்து வைத்து அடக்கி அதிகாரம் செய்வதற்கான அரசியல் சட்ட அங்கீகாரமே ஒழிய தமிழ் மக்கள் சம உரிமைகளுடன் வாழும் அரசியல் தீர்வல்ல. கடந்த காலத்தில் இடம்பெற்ற தமிழர்களுக்கான தாயகப் போராட்டத்தின் காரணமாக கொல்லப்பட்டவர்கள், சிறைப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், பலனடைந்தவர்கள், பணக்காரர் ஆனவர்கள், பதவி பெற்றவர்கள், இன்று மக்களை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் யார்? எந்த வகைப்பட்டவர்கள்? எந்த பாரம்பரியத்தைச் சார்ந்தவர்கள்? என்ற தகவல்–தரவு–கணிப்பீடு ஆகியவற்றை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தால் தமிழீழத்தின் உள்ளார்ந்த உயிரோட்டமும் உந்து சக்தியும் தமிழ் மேலாதிக்க சாதிவாதமே என்பது துல்லியமாகப் புலப்படும். அத்துடன் இந்த ஆண்ட பரம்பரை தமிழ் பேசும் மக்களை மீண்டும் ஆள்வதற்கு கையாளும் தந்திரோபாயமே இனவாதம் என்பதும் நிருபணம் ஆகும்.

6 பக்கம் தொடர்ச்சி

எந்தவித சட்ட விரோத நடவடிக்கையினையும் இவர் மீது நிருபிக்க முடியாத இந்திய வக்கற்ற ஆளும் அரசு தன்னை பெரிய ஜனநாயக நாடாக கூறிக் கொண்டு கருத்துச் சுதந்திரத்தை மறுத்து எண்ணற்ற அரசியல் கைதிகளை இவ்வழியில் சிறையில் அடைத்து பல ஆண்டுகளாக துன்புறுத்தி வருகின்றது.

28–06–2015 அன்று லண்டனில் இந்திய தூதரகம் முன்பு போராசிரியர் சாய்பாபாவையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சாவதேச அளவில் பல்வேறு நாட்டு முற்போக்கு சக்திகள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். சமவுரிமை இயக்கத்தின் லண்டன் கிளையினரும் இதில் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து உரையாற்றியிருந்ததுடன் இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் தமது போராட்டம் குறித்த துண்டுப்பிரசுரத்தை அங்கு வந்திருந்தவர்கள் மத்தியில் விநியோகம் செய்திருந்தனர்.

5 பக்கம் தொடர்ச்சி

இதன் மூலம் உருவாகும் மனித செயல் என்பது பிறருடைய செல்வத்தை இடைவிடாது குவிப்பற்காக உழைப்பதும், அவர்களின் செல்வத்தைப் பெருக்குவதற்காக வாங்கி நுகர்வதுமாக குறுகி விடுகின்றது. வாங்கத் துண்டுவதும் – அதை நுகர்வதும் – திருத்தியற்ற மனநிலையுமே மனிதப் பண்பாடுகளாக கலச்சாரமாக மாறிவிடுகின்ற உலகில், இயற்கை அழித்து உயிரற்ற பொருளாக குவிகின்றது. செல்வத்தின் குவியல் ஏழைகளை எப்படிக் குவிகின்றதோ, அதே விகிதசாரத்தில் பொருள் நுகர்வுத் தன்மையை இழந்து பொருள் கழிவுகளாக குவிக்கின்றது.

செல்வத்தை குவிக்கும் உற்பத்தியில் போட்டியிடும் போது, ஒன்றையொன்று அழித்து விடுகின்ற செயலானது, இறுதியில் ஒரு சில பன்னாட்டு உற்பத்தியாக குறுகிவிடுகின்து. இது உண்மையில் நுகர்வுபொருள் பற்றி நுகர்வோனின் கண்ணோட்டத்தை மாற்றுவதன் மூலம் நடந்தேறுகின்றது.

இன்றைய நாளை விட நேற்று அதிக தேர்வு கொண்ட பொருள் சந்தையில் இருந்து நுகரப்பட்டது. இன்று அது குறையும் போது நேற்றைய பொருள், மனித சிந்தனையில் கழிவுக்குரியதாக – இழவுக்குரிய பொருளாக மாறிவிடுகின்றது. அதாவது நேற்று சந்தையில் இருந்த பொருள், இன்று கழிவாகி விடுகின்றது. இப்படி செல்வத்தை குவிக்க ஒன்றையொன்று அழிக்கும் போட்டி கூட, சுற்றுச்சூழலை அழிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

## நுகர்வோன் பொருளை பயனற்றதாக உணர்தல் மனித இயல்பா?

பொருள் பயன்பாட்டுத் தன்மை இழக்கும் போது தான், மூலதனத்தைப் பெருக்கும் என்பது உற்பத்திக் கொள்கை. இதற்கமைய பொருளை நுகர்வோன் பொருளை பயனற்றதாகவும் – இழிவானதாகவும் கருதவேண்டும். தனது தகுதிக்கும் – அந்தஸ்துக்கும் – கௌவுரத்தக்கும் பொருள் அருகதையற்ற ஒன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இதை உணர வைப்பதற்கான விளம்பரங்களையும் – பண்பாட்டுகளையும் இன்று தொலைக்காட்சியும் – ஊடாகங்களும் உற்பத்தி செய்கின்றன. மனித நுகர்வை திருத்தியற்றதாக்கி – விதவிதமாக நுகர வைக்கின்ற பண்பாட்டை உருவாக்கிவிடுகின்றது. பொருளை தனது தகுதிகுரிய ஒன்றாக கருதுமாறு மனித சிந்தனையை குறுக்கி, அதை சாத மாற்றக் கோருகின்றது. தன்னைச் சுற்றி அனைத்தையும் சாத மாற்றிக் கொள்வதன் மூலமே, புத்துயீர்ப்பையும் – சமூகத் தகுதியையும் பெறமுடியும் என்ற உளவியலுக்குள் மனித நடைமுறைகள் கொண்டு வரப்படுகின்றான்.

இதன் மூலம் மற்றவர்களின் இருந்து தன்னை வேறுபட்டவனாக உணர வைப்பதுடன், மற்றவனுக்கு முரனாக வேறுபட வாழ்வதையும் கோருகின்றது. பொருள் – மனித உறவுகள் அனைத்தும், மற்றைய மனிதனுக்கு எதிரானதாக கட்டமைக்கப்படுகின்றது. தன்னை வேறுபடுத்துவதில் இருந்தே, அனைத்து வகையான வாழ்கை முறையும் கட்டமைக்கப்படுகின்றது.

உதாரணமாக ஆண் – பெண் இணைந்த காதலை வாழ்கையாகட்டும் – குடும்ப வாழ்கையாகட்டும், இவை குறுகிய காலத்தில் சலிப்பூட்டுவதாக – மகிழ்ச்சியற்றதாக மாறிவிடுவதைக் காணமுடியும். ஒரே பெண் – ஆண் உறவு சலிப்புட்டுவதான மனநிலைக்குள்ளும் – சக துணையை மாற்றக் கோரும் மனநிலைக்குள் மனிதனை சந்தை கொண்டு வந்திருக்கின்றது. ஆண் – பெண் தன்னை விதவிதமாக மாற்றிக் கொள்வதன் மூலம் தான், குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும் என்றளவுக்கு தங்களை மற்றிக் கொள்ள அழகுநிலையங்களை நாடுமாறு கோரும் தொடர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்று சாதாரணமாகி இருக்கின்றது. .

மனித உறவுகள் கூட இன்று சலிப்பூட்டுவதாக – மகிழ்சியற்றதாக, அதை தொடர்ந்து புதிதாக மாற்றக் கோருகின்றது. இன்று தொலை பேசி – ஈமெயில் – பேஸ்புக்கில் இதன் பொதுப் பிரதிபலிப்பைக் காண முடியும். இங்கு முகம் தெரிந்த – முகம் தெரியாத உறவுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம், தன்னை சுற்றிய மனிதர்களையும் – சூழலையும் கூட மறக்கடிக்கவும் – புறக்கணிக்கவும் வைக்கின்றது. வாகனம் ஓட்டும் போது விபத்து போன்ற ஆபத்தான சூழலிலும் சரி, சக மனிதனுடன் இருக்கும் போதும் சரி, தான் தானாக உணர முடியதவானகும் வண்ணம் உளவியல் சிதைவுக்குள் மனிதனை இன்றைய உற்பத்தியும் – நுகர்வுபற்றிய கொள்கையும் கொண்டு வந்திருகின்றது.

இங்கு புதிய உறவுகள் – உரையாடல்கள் என்று அந்தரிக்கும் பதற்றமான மனநிலையானது, அருகில் உள்ள உயிருள்ள மனித உறவில் இருந்து அன்னியமாக்கின்றது. இயற்கை மட்டுமல்ல – முகம் தெரிந்த மனித உறவுகள் கூட தனது மகிழ்சிக்கு தடையானதாக – எதிரானதாகவும் மாற்றி விடுகின்றது. நிம்மதியற்ற – தகுதியற்ற வாழ்கை புதிபுதிதாக பொருளையும் – வாழ்கையையும் தேடி, சந்தையிலும் – சமூக வலை தளங்களிலும் அலைய வைக்கின்றது. மனித உறவுக்களைக் கூட பொருளைப் போல் மாற்றக் கோருகின்றது.

## முடிவாக


இயற்கை அழிப்பதன் மூலம் தான் செல்வத்தைப் பெருக்க முடியும் என்பது, இயற்கைக்கும் – சுற்றுச் சூழலுக்கும் அழிவுக்குமான காரணமாகும். மறுசுழற்சியும் – மனித செயற்பாட்டில் இருந்து இயற்கை பாதுகாக்கும் சிறப்பு மண்டலங்களும் – தடைகளும் இயற்கையை பாதுகாக்காது. அது இயற்கையை அழிப்பவனின் மோசடியாகும். இயற்கையை பாதுகாக்க உற்பத்தி கொள்கை மாற்றுவது ஒன்று தான், எம்முன்னுள்ள ஒரேயொரு தீர்வாகும்.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

போராட்டம்

41–32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய
தொலைபேசி / தொலைநகல் : 094 113185692
mpssrilanka@gmail.com, http// www.peoplesstruggle.com



# முதலாளித்துவ ஜனநாயகத்தை தோற்கடித்து உழைக்கும் மக்களின் ஜனநாயகத்தை நிறுவுவோம்


## அன்று குடும்பம் - இன்று கூட்டு - நாடோ குழப்பத்தில்

## உண்மையான மாற்றம் இடதுசாரிய பலம்!




முன்னிலை சோஷலிஸக் கட்சி

உண்மையான மாற்றம் இடதுசாரிய பலம்!



සැබෑ වෙනසක් වමේ බලයක්!






அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் – அவுஸ்ரேலியா




அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் – பிரான்ஸ்




யாவரும் கேளிர் – கனடா நிகழ்வு



மகரகமவில் முன்னிலை சோசலிச கட்சியின் தேர்தல் பிரச்சாரம் கூட்டம்




அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் – இங்கிலாந்து




அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் – இலங்கை

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

41- 32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய வசிக்கும் ஜீட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்டரா எட்வடைவிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

படிப்பகம்